# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் உ௬ | திருவள்ளுவர் யாண்டு ககஅக<br>விகிருதி—வைகாசி<br>1950—மே | மலர் உ |


## பொழிற்றொண்டர் கருத்துரைகள்

### பாராட்டு

செந்தமிழ்ச் செல்வரும் நம் சங்கப் பேரன்பருமாகிய திருவாளர் S. நடராச நாடார் அவர்கள் (துணை நடுவர், தஞ்சை) வேறு ஊருக்கு மாற்றப் பட்டதனால் அவர்களையும் அவர்கள் மனைவியார் திருமதி புஷ்பம் அம்மையார் அவர்களையும் பாராட்டி வாழ்த்தி வழியனுப்புதற்கென, விகிருதி, சித்திரை, ௰௮ ஆம் நாள் (30—4—50) ஒரு பொதுக் கூட்டம் நம் சங்கச் சார்பில் நடைபெற்றது. ஆண்டுக் குழுமியிருந்த அன்பருள் பலர் விருந்தினரின் தமிழ்ப் பற்றினையும், அவர்களது பொதுத் தொண்டுகளையும் பாராட்டிப் புகழ்ந்து, அவர்கள் செந்தமிழ்ப் பணி நாளும் நாளும் பெருக வேண்டுமெனத் திருவருளை வழுத்தினர்கள். விருந்தினர்களும் நன்றி கூறிப் பிரியா விடை பெற்றுக்கொண்டார்கள்.

* * * * *

## திருநாவுக்கரசர் திருநாள்

விகுருதி, சித்திரை, உஅ ஆம் நாள் (10—5—50) புதன்கிழமை மாலை சூ மணிக்குத் திருநாவுக்கரசர் திருநாள் சங்கச்சார்பில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அது போது தலைமை தாங்கிய கரந்தைக் கவியரசு திருவாளர் அரங்க.வேங்கடாசலம்பிள்ளையவர்களும், திருவாவடுதுறை ஆதீன அம்பலவாண தேசிக உமாமகேசுவர நடுத்தரப் பள்ளித் தலைமையாசிரியர் திருவாளர் சோ. திருநாவுக்கரசு பிள்ளை யவர்களும், தி. ஆ. அ. தே. கரந்தைப் புலவர் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் மு. சடகோப ராமாநுசம் பிள்ளை யவர்களும் அப்பர் அடிகளது உள நலங்களையும் தொண்டின் பெருமையினையும், பாடல் நயங்களையும் பல படியாக எடுத்துப் பாராட்டிப் பேசினார்கள்.

* * * * *

## திருவாவடுதுறை ஆதீன அம்பலவாண தேசிகர் உமாமகேசுவர நடுத்தரப்பள்ளி

இவ்வாண்டு முதல் உயர்நிலைப்பள்ளியாக உயர்வதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன. முயற்சி வெற்றி பெறத் திருவருளை வேண்டுகின்றோம்.

* * * *

## திருவாவடுதுறை ஆதீன அம்பலவாண தேசிகர் கரந்தைப் புலவர் கல்லூரி.

இக்கல்லூரி 1950, சூலை, முதல் நாள் திறக்கப்பெற்று நடைபெறும்.

கல்லூரியிற் சேர்ந்து பயில விரும்பும் மாணவர்கள் கல்லூரி எழுத்தாளருக்கு இரண்டணா அஞ்சற்றலையனுப்பி விண்ணப்ப மடல் பெற்று, 1950, சூன், 15உக்குள் விண்ணப்பத்தை அவரிடம் சேர்ப்பிக்கவேண்டும்.

* * * * *

# கம்பரும் காந்தீயமும்

## ஆத்தானக் கவிஞர் ஆராய்ச்சி சரியா?

---

பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயடு, பூளைமேடு, கோயமுத்தூர்.

---

'இராவணன் போர்க்களத்தில் இறந்து கிடக்கின்றதைக் கண்டு அகிம்சை வழியில் இராவணனைத் திருத்தாமல் கொன்று விட்டேனே' என்று இராமன் வருந்துகிருன் என ஆத்தானக் கவிஞர் 'கம்பரும் காந்தீயமும்' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் பேசி வருகின்ருர்கள். சென்னையிலும் இரண்டு திங்களுக்கு முன் பேசினுர்கள்.

அகிம்சை நன்மை பயக்குமா? இம்சை தீமை பயக்குமா? என்பதைப் பற்றியாவது, அகிம்சை தீமை பயக்குமா? இம்சை நன்மை பயக்குமா? என்பதைப் பற்றியாவது இதுகாலை ஆராய முன் வரவில்லை. ஆத்தானக் கவிஞர் சொல்லும் அகிம்சை ஆராய்ச்சி கம்பர் கருத்துக்குப் பொருந்துமா? பொருந்ாதா? என்ற முடிபே ஈண்டைய ஆராய்ச்சியாகும். எனவே, கம்பர் அமைத்த இராமாயணக் காவிய அமைப்பு அகிம்சை முறையை அடிப்படையாகக் கொண்டதா? என்பதையே முதற் கண் ஆராய்வோம். அதற்காக இவ்வாராய்ச்சியைக் கம்பரின் காவிய அமைப்பு, கம்பரின் இராவண வத அமைப்பு என இருவகையாகப் பிரித்துக் கொள்வோம்.

### 1. கம்பரின் காவிய அமைப்பு.

இம்பர் முழுதும் பம்பு புகழ்படைத்த கம்பர் இராமனுடைய திருவவதாரத் தோற்றமே, இமசை முறையை அடிப்படையாகக் கொண்டதாகவே காவியத்தைத் தொடங்குகின்ருர். தேவர்கள் எல்லாரும் மகாவிஷ்ணுவினிடம் சென்று, அரக்கர்களுடைய துன்பங்களிலிருந்தும் தங்களைக் காப்பாற்ற வேண்டும என வேண்டிக்கொண்ட பொழுது மகாவிஷ்ணுவே,

***மசாதம் அனையவர் வாழும் வாழ்வுஓர்***
***நிசாத கணைகளால் நீறு செய்யாம்***

*கசரத துரகமாக் கடல்கொள் காவலன்*
*தசரதன் மதலையாய் வருதும் தாரணி*

எனச் சொல்லியதாகக் கம்பர் கூறுகின்றார். இதனால், அரக்கர் களையோ, தீயோர்களையோ இம்சை முறையால் அழிப்பதுவே இராமபிரான் திருவவதாரத்தின் அடிப்படை நோக்கம் என்பது பெறப்பட்டது.

தீயோரை அழித்தலும் நல்லோரைக் காத்தலும் ஆன துஷ்ட நிக்ரகம் சிஷ்ட பரிபாலனம் செய்வதற்காகவே கடவுள் யுகங்கள் தோறும் பிறக்கின்றார் என்பதுவே பௌராணிகர் களின் கொள்கை. இக் கொள்கையைக் கொண்டே பகவத் கீதையில்,

*பரித்ராணாய சாதூநாம் விநாசாய துஷ்கிருதாம்*
*தர்ம சமஸ்தாபனார்த்தாய சம்பவாமி யுகேயுகே.*

என வியாசர் அருளிச் செய்வாராயினர். வியாசரின் துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனக் கொள்கையை முன்னிட்டு, மகா விஷ்ணு மண்ணுலகில் திருவவதாரம் செய்யவில்லை. மகா விஷ்ணுவின் திருவவதாரச் செயல்களையும், மற்றக் கடவுளின் செயல்களையும் கொண்ட இலக்கியங்களைச் செவ்வனே ஆராய்ந்தே, வியாசர் அவதாரங்களைப்பற்றிச் சொல்வாராயினர். இவ்வவதாரங்களின் உண்மைகளைத் தெள்ளித் தெள்ளி ஆராய்ந்தே கம்பர்,

*அறந்தலை நிறுத்தி வேதம் அருள்சுரந்து*
*அறைந்த நீதித்*
*திறந்தெரிந்து உலகம் பூணச் செந்நெறி*
*செலுத்தித் தீயோர்*
*இறந்துகத் துடைத்து ஊறித் தக்கோர் இடர்துடைத்து*
*ஏக ஈண்டுப்*
*பிறந்தனன் தன்பொற்பாதம் ஏத்துவோர்*
*பிறப்ப றுப்பான்*

என இராவணனுக்கு அனுமார் அறவுரை கூறும் முகத்தால் கூறுவராயினர்.

## அவதாரத்தின் கொள்கை

"மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் முதன்மைத் தாய காலமும் கணக்கும் நீத்த காரணன்" இம் மண்ணுலகத்தில் தோன்றி மூன்று காரியங்களைச் செய்கின்றான்.

1. நல்லோரைக் காப்பாற்றுதல்.
2. தீயோரை அழித்தல்.
3. அறத்தை நிலை நிறுத்தல்.

ஆக இம் மூன்றுமே அவதாரக் கொள்கைகள் என்பன பெறப்பட்டன. இக் கொள்கைகளுக்கு மாருக இராமன் எப்படி இருக்க முடியும்? கம்பர் எப்படிக் கூறமுடியும்?

### அவதாரச் செயல்

மகாவிஷ்ணுவின் அவதாரமாகிய இராமன் படித்ததும், பயின்றதும், போர்ப்படிப்பும், போர்த் தொழிலுமேயாகும். அகிம்சை முறைப் படிப்பும் பயிற்சியும் இராமன் படித்துப் பயின்றதாக இராமாயண ஆசிரியர் ஒருவரும் கூறவில்லை. கம்பரும் கூறவில்லை. வசிஷ்டர், விசுவாமித்திரர், அகத்தியர் முதலிய முனிவர்களிடம் இராமன் படித்ததும், பயின்றதும், பெற்றதும், போர்ப் படிப்பும், போர்ப் பயிற்சியும், போர்க் கருவிகளுமே யாகும். ஆகவே தாடகை வதை முதல், இராவண வதை வரையில், இராமனது செயல்கள் முழுவதும் இம்சை முறையேயாகும். கொலைத் தொழிலேயாகும். ஆனல், வாலியின் செய்கையில் மட்டும், இம்சையை விட்டு விட்டு, அகிம்சையைக் கைக்கொண்டிருக்கலாம். அங்கும் இராமன் இம்சை முறையையே கைக் கொள்ளுகிருன். காவியத்தின் கதியையே மாற்றி யமைக்கும் ஆற்றலும், அறிவும் வாய்ந்த கம்பர், காவியத்தின் கதியை மாற்ருமல், இம்சை முறையிலேயே, வாலியின் வதைக்கு வாத மூலமான சமாதானத்தைச் சொல்லி முடிக்கின்ருர். இதனுல் இராமன் பகைவரை வெல்லும் முறை அகிம்சை முறை யில் இருக்க வேண்டுமெனக் கம்பரும நினைக்கவில்லை. மற்றைய இராமாயண ஆசிரியன்மார் யாவரும் நினைக்கவில்லை.

### 2. இராவண வதம்

இராமன் இராவணனைக் கொல்லவேண்டும் எனப் பன்முறை யும் சிந்திக்கின்ருனே யல்லாமல், அகிம்சை முறையில் இராவண னுடைய மனதை மாற்ற வேண்டுமென எண்ணவில்லை. ஆரணியத்திற்கு வந்ததும், முனிவர்களின் முறையீட்டைக் கேட்ட இராமன், இராவணன் முதலான அரக்கர்களைக் கொன்றுவிடுவதே என முடிவு செய்து கொண்டான். இதனு லேயே இராமன் தனது திருவாய் மொழியினுல் "தேவரைத் தீமை செய்த, பேதையைக் கொல்வேன் என்று பேணிய விரதப்

பெற்றி, சீதையைக் குறித்ததேயோ, அன்று அபயம் என்ற வேதியரைக் குறித்தது" எனச் சொல்லுவதை ஆராய்தல் வேண்டும். அதற்காக முதலில் அங்கதன் தூதைப் பற்றிச் சிந்திப்போம்.

இராவணனிடம் தூது போவதற்கு முன்னர், அங்கதன் இராமனைப் பார்த்து, இராவணனிடம் என்ன சொல்ல வேண்டுமென வினவுகின்றான். அதற்கு இராமன்,

'என் அவற்குரைப்பது என்ன ஏந்திழையாளை விட்டுத்
தன் உயிர்பெறுதல் நன்றோ அன்றெனில் தலைகள் பத்தும்
சின்னபின்னங்கள் செய்யச் செருக்களம் சேர்தல் நன்றோ
சொன்னவை யிரண்டில் ஒன்றைத் துணியெனச் சொல்லி
[டென்றான்.

எனச் சொல்வதில் அகிம்சை முறையை எண்ணுகின்றானா? ஒன்று சீதையை விட்டு விடும்படி சொல் இல்லையானால் தலைகள் பத்தும் சின்னபின்னங்கள் பட்டுச் சாவதற்காகப் போர்க்களம் வரச் சொல்' என்னும் போர்க்கள வீர மொழிகளில் அகிம்சையை எதிர் பார்க்க முடியுமா?

### முதல் நாள் போர்

இராம இராவணப் போர்களில், முதல் நாள் போர் நேராக இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த போராகும். அப்போரின் தொடக்கத்திலே, இராமன் இராவணனிடம் அகிம்சை முறையைக் கையாண்டிருக்க வேண்டும். அகிம்சை முறையைக் கற்பிப்பதற்கான வாய்ப்பும் வாய்த்தது. வாய்த்தென்ன? கற்பித்தானா? பார்ப்போம். முதல் நாள் போரின் முடிவில் சேனைகள் அனைத்தும் தோற்றுப் போகத், தேரிழந்து, சாரதியிழந்து, வில்லிழந்து, வாளிழந்து தனிமையாகத் தலை குனிந்து நிற்கும் இராவணனைப் பார்த்து இராமன் பேசுகின்றான். முதல் நாள் போரில் இறந்துபோன அவ்வளவு பேர்களைப் பற்றியும் இராமன் கவலை கொள்ளவில்லை. தனிமையான இராவணனைக் கொல்ல வேண்டும் என்றும் எண்ணவில்லை. அகிம்சை முறையில் இராவணனுடைய மனதை மாற்ற வேண்டுமென்றும் எண்ணவில்லை. இராவணனைப் பார்த்து வீரம் கலந்த சினத்துடன், 'சிறு தொழில் கீழோய்! உன்னுடைய குலத்தினரோடும், உறவினரோடும் சேர்ந்து, படைக்கலங்களும் நீ தேடி அடைத்து வைத்திருக்கும் போர்க் கருவிகளும் கொணர்ந்து போர் செய்; இல்லாவிட்டால் எங்கேனும் ஒளிந்து கொள்' என்கிறான்.

மேலும், 'இராவணனே! நீ உயிருடன் இருப்பதானால் நான் சொன்னபடி செய்' என்று கட்டளை யிடுகின்றான். அஃதாவது:—

'சிறையில் வைத்தவள் தன்னைவிட்டு உலகினில் தேவர்
முறையில் வைத்து, நின் தம்பியை இராக்கத முதற்பேர்
இறையில் வைத்து, அவற்கு ஏவல்செய்து இருத்தியால் அன்றேல்
தறையில் வைக்கிலன். நின்தலை வாளியில் தடிந்து.'

என்பதாம். சிறையில் வைத்தவளை விட்டுவிடச் சொல்வதும், தேவர்களை முறையில் வைக்கச் சொல்வதும், விபீடணனை முதல் அரசனாக வைக்கச் சொல்வதும் தோற்றுப்போன பகைவனைக் கேட்கும் உடன்படிக்கைகள் ஆகும். விபீடணனுக்கு ஏவலாளாக இருக்க வேண்டும் என்பது அவ்வுடன்படிக்கையின் அதிகப்படியாகும். இப்படிச் செய்யா விட்டால் இராவணனுடைய தலைகளை அறுத்துத் தரையில் வைத்து விடுவேன் என்பது அகிம்சை உபதேசமாகுமா? இம்சை உபதேசமாகுமா? இம்சை உபதேசமே யாகும். இன்றேல்,

'ஆளையா உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளையாயின கண்டனை; இன்றுபோய் போரக்கு நாளைவா'

எனப் போர்க்களத்தில் நடக்கும் கொலைத் தொழிலுக்கு உடன்பட்டுச் சொல்வரா? முதல் நாள் போர் முடியும் வரை ஒருவரைத் திருததுவதற்கோ அறத்தை நிலைநிறுத்துதற்கோ தண்டனையையோ கொலையையோ தனது கொள்கையாகக் கொண்டிருந்த இராமன் இறுதியில் இராவண வதையில் அகிம்சையைக் கைக்கொண்டானா என்பதை ஆராய்வோம்.

## இறுதிப் போர்

இராமன் இராவணனை வதைப்பதற்கு முன்னர் பலபோர்களை நிகழ்த்துவிக்கின்றான். இலக்குமணன் நிகழ்த்தும் போர்களேயன்றி, இராமனே கும்பகருணனோடு நேர்முகப் போர் செய்து கொல்லுகின்றான். அப்பொழுது இராமனுக்கு அகிம்சையின் தத்துவம் உதயமாகவில்லை.

இராவணன் வதைப் படலம் 254 செய்யுட்களைக் கொண்டது. அதில், இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த பெரும் போரைப்பற்றிய செய்யுட்கள் 200 உள்ளன. போரின் தொடக்கத்தில் இராமனும் இராவணனும் பலவகை அத்திரங்களையும் சத்திரங்களையும் எய்கின்றனர். அப்போரில் வாள் போரும் மல்போரும் தண்டப்போரும் இல்லை. முழுவதும் வில்

போரேயாம். பிற்பகல் பல நாழிகை வரையிலும், இராமனுடைய விற்போருக்கு இராவணன் இளைக்க வில்லை. இறுதியில் சிறிது களைத்துவிட்டான். இராவணனுடைய தேர்ப்பாகன் இராவணனுடைய களைப்பை முன்னிட்டுத் தேரை நேர் முகத்தினின்றும் சிறிதே ஒதுக்கி நிறுத்தினன். களைப்புத் தீர்ந்த இராவணன் ஒதுக்கி நிறுத்திய பாகனை மிகவும் கடிந்து கொள்ளுகிருன். இவ்வமையத்தில் இராமன் அகிம்சை முறையைக் கைக்கொண்டானு? அன்றிச் சிந்தித்தானு? இல்லை; இல்லை. இராவணனைக் கொல்வதைப் பற்றிய வகைகளையே சிந்திக்கின்ருன். சிந்தித்துச் சிந்தித்து முடிவில இராவணனது தலைகளை அறுத்துத் தள்ளி விடுவதென்ற முடிவிற்கு வந்து, இராவணனுடைய ஒவ்வொரு தலையையும் அறுத்துத் தள்ளுகின்ருன். அறுத்த தலை ஒவ்வொன்றும் முளைத்துக் கொண்டே யிருக்கின்றது. அப்பொழுது,

> 'இவை அனைத்தும் இவனைவெல்லா என
> நவை அனைத்தும் துறந்தவன் நாடினன்'

குற்றங்கள் அனைத்தும் நீங்கினவனுகிய இராமன் இவ்வாறு தலைகளை அறுக்கும் முறையில் இராவணனை வெல்ல முடியாதென்று கருதி வேறு வகையைச் சிந்திக்கின்ருன். அவ்வேறு வகை இம்சை முறையா? அகிம்சை முறையா? எத்தனை முறை இராவணனது தலைகளை அறுத்துத் தள்ளினும், இராவணனது தலைகள் முளைத்துக்கொண்டே யிருக்கும். அதனுல், இனி தலைகளை அறுக்கும் முறை தகாது; மார்பைப் பிளக்கும் முறையே தகுதியானது எனச் சிந்திக்கின்ருன். தனது — மகாவிஷ்ணுவினது—மகனுன பிரும்ம தேவனுடைய படையாகிய பிரும்மாத்திரத்தைக் கொண்டே இராவணனது மார்பை பிளக்க வேண்டுமெனத் தீர்மானிக்கிருன். இங்ஙனம் தீர்மானிக்கும் இராமனை 'நவை அனைத்தும் துறந்தவன்' எனக் கமபர் கூறும் நவையின்மையை நன்கனம ஆராய்க.

> 'நாரணன் திருவுந்தியில் நான்முகன்
> பார வெம்படை வாங்கி இப்பாதகன்
> மாரின் எய்வன் என்றுஎண்ணி வலித்தனன்
> ஆரியன் அவன் ஆவி அகற்றுவான்'

என்பதில் ஆரியன் ஆகிய இராமன், இராவணனது ஆவியை அகற்றுவதற்காக, 'நான்முகன் பாரவெம் படையை வாங்கி இப்பாதகன் மாரின்—மார்பில்—எய்வன் என்று எண்ணி வலித்தனன் என்று தீர்மானித்ததைப் பலமுறை ஆராய்தல்வேண்டும்.

65 ஆம் பக்கம் பார்க்க.

# ஆங்காங்கே.

கோ. தியாகராசன், G. M. V. C. தஞ்சை.

## இலக்கணம்.

"கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே"
(தொல்—எழு-7.)

"இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை"
(பவண—எழு-99.)

மேற்காட்டிய ஓத்துக்களிலுள்ள 'மாத்திரை' என்னுஞ்சொல் நுண்ணிய அளவைக் குறிக்குஞ் சொல்.

நிறுத்தல் அளவில் நுண்ணிய அளவு (மாத்திரை) நெல். எனவே நெல்லிலக்கம் வழக்கில் உளது. ஆங்கிலத்தில் கோதுமை மணி ஒன்று (grain) நிறுத்தல் அளவின் மாத்திரை. (unit of weight measure).

நீர்த் தன்மையானவையின் அளவிற்கு நுண்ணிய அளவு (மாத்திரை) சொட்டு அல்லது துளி—மிணிம் (minim = least அல்லது துளி என்பது ஆங்கிலததில் நீரின் நுண்ணிய அளவு (unit of liquid measure.)

நீட்டல் அளபிற்கு நுண்ணிய அளவு (மாத்திரை) விரல். ஆங்கிலத்தில் பிங்கர் (finger) நீட்டல் அளவின் மாத்திரை. (unit of lineal measure in ordinary parlance.) எண்களுக்கு நுண்ணிய அளவு (மாத்திரை) ஒன்று. ஆங்கிலத்தின் ஒன் என்பதும் 'யூனிட்' என்பதும் ஒன்று என்னும் பொருள்கொண்ட சொற்கள். எனவே 'யூனிட்' என்னும் சொல்லை மாத்திரை யென்னும் பொருளுடன் 60 'கிரைன்' ஒரு 'டிராம்' எனவும், 60 'மிணிம்' ஒரு 'டிராம்' என்றும் அளவைகள் தொடங்கப் படுகின்றன.

காலத்தின் நுண்ணிய அளவை 'சகண்ட்' என்பார் ஆங்கிலத்தில்.

நாம் உட்கொள்ளும் மருந்துகளின் நுண்ணிய அளவை மாத்திரை என்கிறோம்.

இவ்வாறாக, நுண்ணிய அளவைக் குறிக்கும் சொல் 'மாத்திரை' என்பதாயிற்று.

எனவே இப்பொருளை ஏற்று முதலில் எடுத்தாண்ட ஓத்துக்களை ஆராய்வோம்.

இவ்வோத்துக்கள் இயற்றிய நூலோர், கண்ணிமை, கைநொடி, இரண்டும் காலத்தின் மாத்திரைகள் என்னும் கருத்துடன் அமைத்தனரா? ஓசையில்லாது நிகழும் வினையையும் (கண்ணிமை) ஓசையுடன் நிகழும் வினையையும் (கைநொடி) காலத்தின் நுண்ணிய அளவென ஏற்பது சரியா?

தொங்கல் (Pendulam) உள்ள ஒரு பெரிய மணிகாட்டியின் முன்னின்று பார்ப்போமானால், செகண்ட் (Second) என்பது அத்தொங்கல் ஒரு புறமிருந்து மறுபுறம் போகும் காலமெனவும், அதில் 'டிக்' (Tick) என்னும் ஓசை அக்கால அளவின் முடிவைக் குறிக்கும் ஒலியெனவும் நன்கு விளங்கும் இந் நிகழ்ச்சியில் 'டிக்' (Tick) என்னும் ஒலி அக்கால அளவு முழுமையும் நிகழும் ஒலி அல்ல. எனவே கால அளவின் நுண்ணிய அளவும், ஒலியின் நுண்ணிய அளவும் ஒத்த அளவில்லாதவைகளென நன்கு விளங்கும்.

இசையாளர் ஒரு "காலம்" என்பது ஒரு தட்டிலிருந்து அடுத்த தட்டுவரையிலும் நிகழும் காலம். இக்கால அளவில் நிகழும் இசை ஒலி (Note) ஒரு தட்டிலிருந்து மறு தட்டு வரையில் நீடித்து ஒலிக்கும். இவ்வாறாக, இசையில் காலத்தின் அளவும், ஒலியின் அளவும் வரையறுக்கப் பட்டுள.

கடியாரத்தைக் கொண்டு காட்டிய எடுத்துக் காட்டில் காலத்தின் மாத்திரை வேறெனவும், ஒலியின் மாத்திரை வேறெனவும் காட்டப்பட்டது.

இசையில் காலத்தின் அளவும், ஒலியின் அளவும் ஒத்த நிகழ்ச்சிகள் உள்ளன வெனவும் காட்டப்பட்டது.

மேற்கூறியவைகளை கருத்தில் வைத்து, இலக்கண ஓத்துக்களை ஆராயின் காலத்தின் மாத்திரை (Unit of time)

கண்ணிமை யெனவும், ஒலியின் மாத்திரை (Unit of sound) கை நொடி யெனவும் நன்கு விளங்கும்.

எனவே நம் மொழியின் குற்றெழுத்துக்கள் கண்ணிமை யின் கால அளவில், கை நொடி ஓசையின் அளவுள்ள ஒலி களென ஏற்பது தக்கது. இக்கருத்தை நுண்ணிதின் உணர் வோர் உன்னிப்பார்க்க.

**வழக்கத்தில் உள்ள சொற்களின் விளக்கம்.**

**கலம்:—** இச்சொல் நம்வீடுகளில் வழங்கும் சட்டி, பானை முதலியவைகளின் விரவுபெயர். இச் சொல்லைத் துணைக் கொண்டு, மட்கலம், உண்கலம், வெண்கலம் என்னும் புணைப் பெயர்கள் (Compound words) வந்தன.

தண்ணீரில் சட்டி மிதப்பதைக் கண்ட நம் பண்டை மக்கள், தோலால் ஒரு பெரிய சட்டி செய்து, அதில் ஏறி ஆற்றில் சென்றூர்கள். இப்பொருளுக்கு இக்காலத்தில் பரிசு, என்னும் பெயர் வழங்குகிறது. தோலினுல் செய்யப்பட்ட சில பொருள்களுக்கு "தோற்கருவி" "தோற்பாவை" "தோற் பறை" என்னும் பெயர்கள் இப்பொழுது உள்ளனபோல, தோலினுற் செய்யப்பட்ட பெரிய கலத்திற்கு தோற்கலம், என்னும் பெயர் இருந்திருக்கலாம், பின் மறைந்திருக்கலாம்.

ஆங்கிலத்தில் "வெசல்" (Vessel) என்னும் சொல் நம் "கலம்" என்னும் சொல்லின் விரவுப் பொருள் கொண்டதே. நாம் மரத்தினுல் செய்த கலத்தை "மரக்கலம்" என்கிறோம். ஆங்கிலரும் கப்பலுக்கு "வெசல்" (Vessel) என்னும் சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

"கலம்" என்னும் பொருளுள்ள "பாத்திரம்" என்னும் வடமொழிச்சொல் தக்க பண்புடையவரைக் குறிக்க "சற் பாத்திரம்" என்று பயன்படுத்துவதுபோல, ஆங்கிலரும் கட வுளின் அடியாரை (Person considered as an agent of God)க் குறிக்க "வெசல்" (Vessel) என்னும் சொல்லை பயன்படுத்து கின்றனர்.

எனவே சொற்களின் பொருள்களைப் பெருக்குவதில் மேதி னியின் மாந்தரிடையே ஒத்த பண்புள்ளது போலும்.

**தாயம்:—** இச்சொல் கடலிலுள்ள ஒரு பூச்சியின் கூட்டைக் குறிக்கும் சொல். இக்கூடு (தாயம்) இந்திய ஆழியில் மிகக் கிடைப்பது. நம் நாட்டார் தாயத்தை ஒரு காலத்தில் நாணய மாக வழங்கினராம்.

ஆங்கிலர் இந்திய நாட்டை கைப்பற்றியதின் பிறகுகூட தாயம் நாணயமாக வழங்கினதாம். அக்காலத்தில் ஒரு ரூபாய்க்கு 3840 தாயங்கள் மாற்ருக வழங்கினவாம். இதுபோலவே, சயாம் நாட்டில், ஒரு டிக்கலுக்கு (Tical) 6400 தாயங்கள் மாற்ருக வழங்கினவாம். தென் ஆவ்ரிக்காவிலும் (வ். F ) தாயங் கள் நாணயங்களாக வழங்கினவாம்.

தாயங்களில் நூற்றுக்கு மேற்பட்டவகைகள் உண்டாம். இவற்றுள் நாணயமாக வழங்கிய தாயங்கள், வெளிப்புறத்தில் வெண்மையும் அல்லது சிறு சிகப்பும் உட்புறத்தில் நீல நிறமும் உள்ளவைகளாம். இப்பொழுது செப்புக் காசுகளைக் கருவி யாகக்கொண்டு சூதாடுவது போல (செப்புக் காசுகளைக் கருவி யாய்க்கொண்டு சூதாடுவது சீனரிடத்தில் உண்டு) தாயங்களைக் கருவிகளாய் சூதாடினுர்கள் நம் முன்னேர். எனவே "தாயம்" என்னுஞ்சொல் "சூது" என்னும் பொருள் ஏற்றது. (அம் மானைகளைக் கருவியாய் கொண்டு விளையாடும் விளையாட்டு "அம்மானை" என்னும் பெயர் பெற்றதுபோல்)

இந்தச் சூதாட்டில், எண்களாக ஏற்படும் தாயத்தின் உட்புறம், அல்லது வெளிப்புறம் உருட்டும்பொழுது தற்செய லாய் அமைவது. வேண்டுமென்று 6 உட்புறமோ, 6 வெளிப் புறமோ ஒரு உருட்டில் தோன்றும்படியாய் உருட்ட முடி யாது. (சூதினுல் செய்யலாம். இதை அழுகினி ஆட்டம் என்பார் நம்மக்கள்)

எனவே 'தாயம்' என்னும் சொல் 'தற்செயல்' (Chance) என்னும் பொருள் பெற்றது. (தாயம் is a game of Chance and not of skill).

நாம் ஒரு குடியில் பிறப்பது தற்செயலாய் அமைவதாகை யால் நாம் பிறந்த குடிக்கு 'தாயம்' அல்லது 'தாயத்தார்' (agnate relations) என்னும் பெயர் அமைந்தது. பெண் கொள் வது நம் விருப்பத்தால். எனவே பெண்வழிச் சுற்றத்தார் (Cognate relations) தாயத்தில் சேரார்.

இத்தாயத்தில் பிறந்தவர்களுக்கு அத்தாயத்தின் சொத்துக்களில் உரிமையுண்டு. எனவே 'தாயம்' என்னுஞ்சொல் 'பிறப்புரிமை' என்னும் பொருள் பெற்றது.

'மூத்தோர் மூத்தோர் கூற்றம் உய்த்தெனப்
பால்தர வந்த பழவிறல் தாயம்' (புறம்.)

ஈண்டு, 'தாயம்' என்ற சொல் யான் மேலே கூறிய கருத்தில் ஆட்சி செய்யப் பட்டுள்ளது. ஒருவன் தன் முயற்சியானன்றி, ஊழ் வயத்தால் (By chance) அடைந்த உரிமை யென்று பொருள்பட இவ் வடிகள் அமைந்துள்ளன.

'முரசு கெழு தாயத்து அரசோ தஞ்சம்' (புறம்-73)
இதில் 'தாயத்து அரசு' என்னும் சொற்கள் 'மூதாதை வழி வந்த அரசு' (Heriditary Kingdom) என்னும் பொருளுள்ளது

'நிலை இய தாயம் ஆகலும் உரித்தே' (நற்றிணை-327)
இது 'நிலை பெற்ற உரிமை யாதலும் உடைத்து' என்னும் பொருள் கொண்டது.

எனவே, இந் நாட்டில் பிறந்த நமக்குள்ள உரிமைகளைக் குறிக்க (Birth right) 'தாயம்' என்னும் சொல் ஏற்றது.

**முறி**:—இச் சொல் 'ஓடி' என்னும் பொருள் கொண்டது. 'முறி' எனினும் 'முரி' எனினும் பொருள் ஒன்றே. சொல் விளக்கத்தில் (Dictionary) முறிதல்=முரிதல்; முறிவு=முரிவு. எனவும் பொருள் காட்டப்பட்டிருக்கிறது; (இதுபோல் றகர, ரகரங்களால் பொருள் வேற்றுமைப்படாத சொற்கள் இன்னும் எத்தனை தமிழ் மொழியில் உள்ளன என்பதையும், அவ்வாறாக வேற்றுமைப் பொருள் ஏற்காததற்கு காரணங்கள் என்ன என்பதையும் மொழி நூல் ஆராய்ச்சியாளர் ஆய்ந்தறிய வேண்டும்)

ஒருவரின் தாயச் சொத்துக்களை (Heriditary properties) பங்குகள் செய்து எழுதும் சீட்டிற்கு 'முறிச் சீட்டு' என்னும் சொல் சிற்றூர் மக்களிடையே இன்னும் வழங்குகிறது.

'பாக பத்திரம்' என்னும் வடமொழிச் சொல்விற்கு ஈடாக 'முறிச் சீட்டு' அல்லது 'முறி ஆவணம்' என்னும் சொற்களை ஏற்பது தமிழ் மக்களின் கடமை.

## தற்காலத்தில் வழங்கும் பிற மொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள்.

1. நர்ச் (ச்=S) Nurse:—நோயாளிகளுக்குப் பணி செய்யும் பெண்களை நர்ச் (Nurse) என்கிறோம். பண்டை காலத்தில் நம் பெண்களுக்கு தோழியாகவும், பணிப் பெண்ணாயு மிருந்தவர்களுக்கு 'செவிலித் தாய்' என்று பெயர். 'செவிலி' என்னுஞ் சொல்லிற்கு 'அக்காள்' அல்லது 'வளர்த்த தாய்' என்பன பொருள். இச் சொல் இக் காலத்தில் வழக்கிலில்லாது மறைந்தது. இச் சொல்லை இக் காலத்தில் நோயாளிகளுக்குப் பணி செய்வோரை குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்துவது நேர்மை. செவிலி=நர்ச். (Nurse)

2. கொம்பு:—நம் பண்டை மக்கள் காளையின் கொம்பை ஒலிக்கும் கருவியாகப் பயன் படுத்தினர். ஆங்கிலரும் ஒலிக்கும் கருவியாய் கொம்பைப் பயன் படுத்தினர். (Horn=கொம்பு) காளை மாட்டின் கொம்புகளே நீண்டு, பருத்து, அடியில் கரடு முரடில்லாமல் அமைந்தன. ஆகையால் காளை மாட்டின் கொம்பே ஒலிக்கும் கருவியாய்ப் பயன் படுத்தப்பட்டது. காளை எக்காள மிடுவ தாகையால் இந்த ஊது கொம்பிலிருந்து வரும் ஒலியை இப்பொழுதும் 'எக்காளம்' என்கிறோம். எனவே, மின்னூர்தியிலுள்ள ஊது குழலிற்கு 'கொம்பு' என்னும் பெயர் கொடுத்து அக் குழலின் ஓசையை 'எக்காளம்' என்று குறிப்பது தக்கது.

3. உயவு:—மின்னூர்திகளுக்குப் பயன் படுத்தும் கொழுப்பிற்கு 'உயவு' என்னும் பழஞ் சொல் பொருந்தும்.

(உயவு=Grease)

'தஞ்சா காடேனும் உயவாமல் சேரலோ இல்,

(பழமொழி-168)

4. மின்னூர்திகளுக்கும், மற்றப் பொறிகளுக்கும் பயன் படுத்தும் எண்ணெயை ஒரு தகரப் புட்டியிலிருந்து அதன் மூக்கின் (nozzle) வழி ஊற்றுவதை நாம் பார்க்கிறோம். இந்த பொருளுக்கு ஏற்றச் சொல் 'சொரி சுரை'

(சொரி சுரை=Oil Can)

'வளி முனை அவிர் வருங் கொடி நுடங்கு தெருவில்
**சொரி சுரை** கவரும் நெய் வழிபு உராலின்
பாண்டில் விளக்குப் பரூஉச் சுடர் அழல.

(பதிற்றுப்பத்து—47)

# பட்டினத்துப் பிள்ளையார்.

சித்தாந்த கலாநிதி. ஒளவை. சு. துரைசாமி, அண்ணாமலைநகர்.

(முற்றொடர்ச்சி: துணர் உசு, மலர் க, பக்கம் 8)

சிவபெருமான் இன்னவுரு இன்ன நிறம் என்று அறிய வாராத முழுமுதற் பொருள்! "குறி குணம் கடந்தவன்; உறைபொருள் எங்கணும் நிறைபரிபூரணம், அந்தமாதி முந்தையே தவிர்த்த அணுநிமுத்தன், அளவையின் அடங்காது ஒளிர் சுகம்" (கழுமல. 28); சராசரமனைத்தும் அவனிடையே தோன்றி அவனிடையே யடங்கும் (கோயில் 24); எல்லாம் தன்னிடைத் தோன்றித் தன்னிடையே ஒடுங்கினும், சிவபெருமான் தான் பிறிதொன்றில் தோன்றாது வேறாய் நிற்பன். (திருவிடை மும். 22; ஒற்றி. 4); வேறாய் இருப்பினும், "ஏழுலகாகி எண்வகை மூர்த்தியோடு ஊழிதோ றூழி எண்ணிறந் தோங்கி," (ஒற்றி. 1) எவ்வகைப் பொருளினும் ஒன்றாய் அவ்வப் பொருளாகவும் இருப்பன். ஒன்றாக இருப்பவன் வேறாய் நிற்பது, ஒன்றோடொன்றொவ்வாது வேறுபட்ட உயிர்கள் தத் தம் எல்லையில் இனிது ஒழுகப்பண்ணுதற்கு என்பாராய், "ஒவ்வாப் பன்மையுன் மற்றவர் ஒழுக்கம் மன்னிய......... விரவியும் வேறாய் நின்றனை" (ஒற்றி. 4) என்று விளக்குகின்றார். இப்பரம்பொருள் இங்ஙனம் உலகுயிர்களோடு ஒன்றாயும், வேறாயும் இருக்குமாயினும், மூலமும் நடுவும் முடிவும் இன்றிக் காலங் கடந்து நிற்கும் கடவுள் என்று எடுத்து,

"உளக்கணுக் கல்லா தூன்கணுக் கொளித்துத்
துளக்கற நிமிர்ந்த சோதித் தனிச்சுடர்
எற்புத் துளைதொறு மிருசெவிக் கெட்டா
தறப்பின் றெழுதரு முள்ளத் தோசை

வைத்த நாவின் வழிமறித் தகத்தே
நித்தித் தூறுந் தெய்வத் தேறல்
துண்டத் துனையிற் பண்டைவழி யன்றி
அறிவி னூறும் நறிய நாற்றம்
ஏனைய தன்மையும் எய்தாது எவற்றையுந்
தானே யாகி நின்ற தற்பரன்" (இடை மருது. 22)

என்று உயிர்களின் அறிகருவிகட்கெட்டாமல் அகத்தே அவ்வப் புலப்பொருளாய்க் காட்சியளிக்கும் என விளங்கி யுரைப்பர்.

இவ்வாறு உலக முழுதும் எல்லாம் தானேயாய் நிற்கும் கடவுளாகிய சிவபரம் பொருட்குச் சமயங்கள் பலவும் உரியன என்று கூறுவது சைவத்தின் தனிச் சிறப்பாகும். "அன் றென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள், ஒன்றோ டொன் றொவ்வா துரைத்தாலும்-என்றும், ஒரு தனையே நோக்குவார் உள்ளத் திருக்கும்" (இடை மருது. 17) எனவும், 'திருவமர் மாலொடு திசைமுக னென்றும், உளனே யென்றும் இலனே யென்றும், தளரா னென்றும் தளர்வோ னென்றும், ஆதி யென்றும் அசோகின னென்றும், போதியிற் பொலிந்த புராண னென்றும், இன்னவை முதலாத் தாமறி யளவையின், மன்னிய நூலின் பன்மையுள் மயங்கிப், பிணங்கு மாந்தர் பெற்றிமை நோக்கி, அணங்கிய அவ்வவர்க் கவ்வவையாகி 'யடையப் பற்றிய பளிங்கு போலும், ஒற்றி மாநக ருடைய கோவே' (ஒற்றி. 2) எனவும் கூறிச் சமய வேற்றுமையைக் களைவதில் பிள்ளையார் சிறந்து நிற்பர். உடம்பை மரக்கல மாகவும், வினைகளைச் சரக்காகவும் உலக வாழ்வைக் கடலாக வும் உருவகம் செய்யும் பிறிதோரிடத்தே, அடிகள், பல் வகைச் சமயங்களையும் கடற் றுறைகளாக, எடுத்துக் கூறுவது (கழு மல. 16) சமய வேற்றுமையில் ஒருமை காண முயலும் அடிகளது மனப்பான்மையைத் தெரிவிக்கிறது.

இனி, சைவ புராணங்கள் சிவபெருமான் மாதொரு பாகனுயக் கங்கையும் திங்களும் தாங்கிய சடைமுடியும்,

நெற்றி விழியும் நீலகண்டமும் எடுத்த பாதமும் தடுத்த கங்கையும் புலி யதளாடையும், சூலப் படையும் மழுப்படையும், ஆனேற் றூர்தியும் ஆனேற்றுக் கொடியும் பிறவு முடையனாய்த் தோன்றும் தோற்றத்தை எடுத்தோதி, புர மெரித்ததும், தக்கன் வேள்வி தகர்த்ததும், அயன் றலையைக் கொய்ததும், காமனைப் பொடித்ததும், காலனைக் காய்ந்ததும், பிறவும் விரித்துக் கூறுவன வாகும். இவற்றையெல்லாம் பிள்ளையார் பல திருப் பாட்டுக்களில் விரித்தும் தொகுத்தும் அழகொழுகப் பாடி யுள்ளார். மேலும், சிவபெருமான், திங்களைச் சூடுதல் ஆனேறு ஏறுதல் முதலிய செயல்களின் கருத்து இது வென்பாராய்,

'தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி
யாமதி யானென வமைத்த வாறே
அறனுரு வாகிய ஆனே றேறுதல்
இறைவன் யானென இயற்று மாறே
அதுவவன் அவனென நின்றமை யார்க்கும்
பொதுவிலை யானென வுணர்த்திய பொருளே
முக்கண னென்பது முத்தீ வேள்வியில்
தொக்க தென்னிடை யென்பதோர் சுருக்கே
வேத மான்மறி யேந்துதல் மற்றதன்
நாதம் நானென நவிற்று மாறே
மூவிலை யொருதாட் சூல மேந்துதல்
மூவரும் யானென மொழிந்த வாறே
எண்வகை மூர்த்தி யென்பதிவ் வுலகினில்
உண்மை யானென வுணர்த்திய வாறே' (ஒற்றி. 6)

என மொழிந்தருளுகின்றார்.

இனி, சிவ நெறி பேணும் சைவர்களுக்குத் திருநீறும் திருவைந் தெழுத்தும் திருவக்கமணி மாலையும் சாதனங்களாகக் கூறுவர். இவற்றைப் பொருளெனக் கொள்ளாதார்க்குப் பிறவியினின்றும் வீடு பேறு கிடையா தென்பர். இதனை, பிறவி நோய், 'மாறும்படிக்கு மருந்துளதோ சண்பை வாணர் கொண்ட, நீறும் திருவெழுத் தோரைந்தும் கண்டியும் நித்த நித்தம், தேறும் பொருளென் றுணராத மாயச் செருக்கினர்க்கே' (கழுமல. 21) என்றும், பெருவேந்தராயினும், 'நன்னீறு நுதற் கிலரேல், என்றும் அரசும் முரசும் பொலியா இரு நிலத்தே' (திருவேகம்ப திருவந். 30)

என்றும் 'காணீர் கதி யொன்றும் கல்லீ ரெழுத்தஞ்சும்' (திருவிடை. 12) என்றும் சிறப்பித் தோதுகின்றார்.

இச் சாதனங்களைப் பொருளாகக் கொண்டவர் சிவ பெருமானை அகத்தும் புறத்தும் வழிபடும் இயல்பினராவர். புற வழிபாடு திருக் கோயிலில் இருக்கும் இறைவன் திரு வுருவைச் சிவ னெனவே தேறி நிறைந்த அன்புடனே நீராட்டிப் பூவிட்டு அருச்சிப்ப தாகும். நெஞ்சத்தில் திரு வைந் தெழுத்தை நினைந்து அதன் வாயிலாக உள்ளத் தாமரையில் சிவனைக் கண்டு இன்புறுவதாகும். (கழும. 22)

புற வழிபாட்டை, 'பத்தியாகிப் பணைத்த மெய்யன் பொடு, தொச்சியாயினும் கரந்தையாயினும் பச்சிலை யிட்டுப் பரவுந் தொண்டர்,' (இடைமருது. 19) என்றும், 'போதும் பெறுவிடில் பச்சிலை யுண்டு புன லுண்டெங்கும், ஏதும் பெறு விடில் நெஞ்சுண் டன்றே' (கழுமல. 12) என்றும் எடுத் தோதுவர். இவ் வழிபாட்டின் உறுப்பாக இறைவன் புகழ் கேட்பதும், காலை மாலைகளில் திருக் கோயில் வலம் வருவதும் திருக் கோயில் திருப்பணி செய்வதும் (கோயில். 24) கூறப் படுகின்றன. அக வழிபாட்டின் கண், காமம் வெகுளி முதலிய குற்றங்களைப் போக்கி, ஐம் பொறிகளையும் ஒடுக்கி, அன்பும் அருளும் வாய்மையும் மேற்கொண்டு சிந்தைக்கண் சிவபெரு மானை எழுந்தருள்வித்து வழிபடுவ தாகும். இதனைப் பாழறையைப் பள்ளியறை யாக்கும் செயல் மேல் வைத்தும் (கழுமல. 4), பாற் கடல் கடைந்து அமுதம் பெறும் செயல் மேல் வைத்தும் (கழுமல. 13) உருவகவணி நலம் திகழச் சொல்லோவியம் செய்து காட்டுகின்றார்.

உயிர்கள் ஞானம் பெற்று வீடு பேறடைதற்குரிய பக்குவ மெய்துங்கால் சிவபெருமான் குருவாய் வந்து அருள் ஞானம் வழங்குவ னென்றும் ஞானத்தால் வீடு கைகூடு மென்றும் சித்தாந்தமாகிய சைவாகமங்கள் கூறும். அதனை நம் பட்டினத்தார், 'மேற்படும் இதயப் பாற் கடல் நடுவுள், பரம்பரை தவறு வரம் பெறு குரவன், மருளற விரங்கி யருளிய குறி யெனும், சிந்தையில் கனக மந்தரம் நிறுவி, மாணறி வென்னும் தூணிடைப் பிணித்த, நேச மென்னும் வாசுகி கொளுவி, மதித்த லென்னும் மதித்தலை யுளுற்றிய, போரா வின்பச் சீரா னந்தப், பேறலரு மமுதம் திறனெடும்

பெற்று, ஞானவாய் கொண்டு மோனமா யுண்டு, பிறப்பிறப் பென்னு மறப் பெரும் பயத்தால், பன்னுட்பட்ட வின்னுங் ககற்றி, என்னையுந் தன்னையும் மறக்திட், டின்ப மேலீ டெய்துதற் பொருட்டே' (கழுமல. 13) என்று கூறுகின்றார். இவ்வாறு திருவருள் ஞானத்தைக் குரவன் அருளப் பெற்ற வழி, மனத்திடைப் படிந்து கிடக்கும் இருள் நீங்கும்; உள்ளம் தெளிவுறும்; அத் தெளிவின்கண் இன்பம் பெருகும்; அது வழியே இதுகாறும் கண்டறியாத மகிழ்ச்சி மேலிடும்; இறைவன் பால் அயராத அன்பு தோன்றும் (கழுமல, 6) என்று விளக்குகின்றார். மருள் எனவும் இருள் எனவும் இங்கே குறிக்கப் பெறுவன ஆணவம் கன்மம் மாயை என்று கூறப்படும்; அவற்றை, 'பேரிக லாணவக் காரிருள்' எனவும், 'மின் றொடர் வல்வினை வன் றொடர்' எனவும், 'மாயைமா மாயையாய பேய்' (கழுமல. 13) எனவும் வகுத் துரைப்பர்.

இவ் வண்ணம் உணர்த்தப்படும் சிவ ஞானம் கைவரப் பெற்றவர், யாது குறித்தும் எவர்க்கும் அஞ்சுதலின்றி, மனைவி மக்கள் முதலிய சுற்றத் தொடர்பும் செல்வமும் பிறவும் பொருளென நினையாது திருவருளே நினைந்து இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் எண் வகைச் சித்தியும் தாமே வந்தபோதும் அவற்றை மறுத் தொதுக்கிக் கீளும் கோவண மும் உடுத்து ஓடொன்றைக் கையிலேந்தி இரந் துண்பதும், தரையிற் படுத் துறங்குவதும் சால்பு குன்றாராய், மன்னுயி ரனைத்தையும் மகவெனக் கருதி ஒக்கப் பார்க்கும் உயர் நிலைத் தொண்டராய் விளங்குவர்; அவர் வாழ்வின் முன் உல கியலிற் பெருஞ் செல்வம் பெற்று வாழும் பெரு வாழ்வு 'குளப்படி நீரும் அளப்பருந் தன்மைப் பிரளயச் சலதியும்' (இடைமருது.7) போல ஒவ்வா இயல்பினதாம். இச் சான்றோர். தாம் பெற்று மகிழும் அருள் ஞானத்தால், தம்மை யுணர்ந்து, தம்மை யடிமையாக வுடைய தலைவனாகிய சிவனை யுணர்ந்து ஏனை எல்லோரையும் இனி துணரும் சிவ ஞானச் செல்வ ராவர். 'தெய்வத் திருவருள் கை வந்து கிடைத்தலின், மாயப் படலங் கிறித் தூய, ஞான நாட்டம் பெற்ற பின் யானும், நின் பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும், என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன், நின் னிலை யனைத்தையுங் கண்டேன்' (திருவிடை. 13) என்று தாமும

அச் சிவ ஞானக் காட்சி பெற்ற சிறப்பைப் பட்டினத்தார் எடுத்துரைக்கின்றார்.

பட்டினத்தார் திருவருள் நாட்டம் பெறு முன்பெல்லாம் இறைவனை வேண்டுமிடத்து, 'பேதையேன் பாசத் தீவினை யகற்றித், திருவருட் செல்வம் பெருகுமா றுதவி அளித்தருள்' (கழுமல. 19) என வேண்டினர். அக் காலத்துக் 'கல்லா மனத்துப் புல்லறிவு தொடரா' இல்லன உள்ளனவாயும் உள்ளது காணப்படாமலும் காட்சி யளித்தன; 'திருவருள் நாட்டம் கருணையிற் பெறலும்' யாவையும் பொய்யெனத் தோன்றின; சிவ பரம் பொருளே மெய்யெனத் தோன்றக் கண்டார். அதனை, 'ஓவியப் புலவன் சாயல் பெற எழுதிய, சிற்ப விகற்பமெல்லாம் ஒன்றித், தவிராது தடவினர் தமக்குச், சுவராய்த் தோன்றும் துணிவு போன்றனவே' (கழுமல. 10) என்று விளக்குகின்றார்.

இறுதியில் அவர் ஞான நெறியில் முதிர்ந்து திருவருட் பெருஞ் செல்வராய்த் திகழ்ந்த காலையில், திருவொற்றியூர் இறைவனை நோக்கி, 'சேர்விடம் இன்னதெனத் திறப்பட நாடி யடைதற்கு அரியவனே, நாடற்குரிய வாயில் எல்லாவற் றுலும் நாடினேன்; இனிச் செய்வதொன்று மறியேன்' என்று செயலற் றொழிகின்றார். அப்போது அவர், பெற்ற தாய் சேய்மையிலிருப்பினும் அழுத குழவி பாலுண்பது இயற்கை; அவ் வியல்பு தானும் அறியாது 'எண்ணில் ஊழி பிறவியின் மயங்கி' வாய்தல் (வாயில்) அறியாது மயங்கினேன்; கண்ணிலாக் குருடர் கண் பெற்றாங்கு நின் திருவருள் நாட்டம் பெற்றேன்; என்னை இப் பிறவியிற் 'கட்டிய நீயே அவிழ்க்கினல்லது, எட்டனையாயினும் யான் அவிழ்க் கறியேன்' என் கருவி கரணங்களாக 'விளங்குவ எல்லாம், ஒன்ற நின் அடிக்கே ஒருங்குடன் வைத்து' நின்றனன் தமியேன் நின்னடி யல்லது சார்வு மற்று, இல்லை (ஒற்றி. 9) என்று உரைத் தருளுகின்றார்.

திருவெண்காடர் பெருஞ் செல்வப் பெருவாழ்வு வாழ்ந்தவ ராகையால், அதன் பயனாக உலகியலில் செல்வ வாழ்க்கையின் இயல்பைத் தெளிவாக எடுத் தோதுகின்றார். 'வாழ்ந்தன மென்று தாழ்ந்தவர்க் குதவாது, தன்னுயிர்க் கிரங்கி மன்னுயிர்க் கிரங்காது, உண்டிப் பொருட்டாற் கண்டன

வெஃகி, அவிழுநர்க்குச் சுவைபகர்ந்தேவி, ஆரா வுண்டி யயின்றனராகி' பெரியோரைப் பேணாமை, சிற்றினச் சேர்க்கை, பிறன்மனை நயத்தல், பொருட் பெண்டிர் முயக்கம் முதலியன செய்து, நச்சி வந்த நல்கூர் மாந்தர்க்கு 'அக னமர்ந் தீவார் போல முக மலர்ந்து, இனிது மொழிந்தாங் குதவுதலின்றி, நாளும் நாளும் நாள் பல குறித்து' அவரை வருத்துதலும், இம்மை மறுமை யில்லை யென நாத்திகம் பேசுதலும், செல்வத்தையே பெரிதாக விரும்பித் தன்னையே வியந்து கொள்வதும் (திருவிடை. 7) பெருஞ் செல்வ வாழ்வின் இயல்பு என இயம்புகின்றார். இவ்வாறே மகளிர் நலம் பாராட்டித் திரியும் மக்கள் செயலையும் (கோயில். 15) எடுத்தோதி யிழிக்கின்றார்.

செல்வ வாழ்வும் பெறுவோர் அதற்காக முயலும் பல்வேறு முயற்சிகளையும் நிரல்படக் கோத் துரைப்பதில் பிள்ளையார் நிகரின்றிப் பிறங்குகின்றார். நிலத்தை உழுது விதை விதைத்துக் கார் வருமென்று விண்பார்த்திருப்பதும், கிளைஞர்களைப் பிரிந்து பொருள் வயிற் சேறலும், போருடற்று வதும், கடலில் எந்திரம் கடாவிற் சூன்று பார்த்து வங்கம் செலுத்துவதும், வேந்தர்க்குச் சோற்றுக் கடன் பூண்பதும், வேறு பல் தொழிலில் முயல்வதும், வாட் போர் செய்வதும் அறியாதார்க்கு அறிவு கொளுத்துவதும், சொற் போர் செய்வதும், பாக்கள் புனைவதும், சொற்பொழிவு செய்வதும் (கோயில். 20) மக்கள் செயல்களாகும். இவ்வாறு ஈட்டப் பட்ட செல்வம் நிலையின்றிக் கெடுவதையும் நன்கு கண்டு, 'கண்டன மறையும் உண்டன மலமாம், பூசின மாசாம் புணர்ந்தன பிரியும், நிறைந்தன குறையும் உயர்ந்தன பணியும், பிறந்தன இறக்கும் பெரியன சிறுக்கும், ஒன்றொன் றொருவழி நில்லா' என்றும், செல்வம் கல்வி கொடை படை குலம் முதலியவற்றால் உயர்ந்தவர்களும் இறந் தொழியக் கண்டு, 'செல்வமொடு பிறந்தோர் தேசொடு திகழ்ந்தோர், கல்வியிற் சிறந்தோர் கடுந் திறன் மிகுந்தோர், கொடையிற் பொலிந் தோர் படையிற் பயின்றோர், குலத்தி னுயர்ந்தோர் நலத்தி னின் வந்தோர், எனையர் எங் குலத்தினர் இறந்தோர் அனையவர், பேரும் நின்றில' (கோயில். 28) என்றும் உரைக்கின்றார்.

துறவு வாழ்வு முதிர முதிரப் பிள்ளையார்க்கு உலகியலின் பல் வகைக் கூறுகளையும் பகுத்து ஆராயும் ஆராய்ச்சி மிகுவ

தாயிற்று. யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை, இளமை நிலையாமை முதலிய நிலையாமைகளை எனைத் துறவிகளைப் போலவே கூறுகின்றாராயினும், மக்களுடைய செயல் வகைகளைத் தொகுத்து வகுத்தும் ஆராய்ந்த முதன்மை நம் பட்டினத்தாருக்கே உரியது. இளமை, மூப்பு, இறப்பு என்றவற்றின் விரைந்த வரவை யெடுத்தோதி, இவற்றையுடைய உடல் வாழ்வைக் கருதி மக்கள், 'செய்தன சிலவே செய்யா நிற்பன சிலவே' எனவும், 'அவற்றிடை நன்றென்ப சிலவே தீதென்ப சிலவே, ஒன்றினும் படாதன சிலவே' எனவும், இவற்றை ஒன்றொன்றாக நோக்கினும், ஒன்றாகச் சேரத் தொகுத்து நோக்கினும், உண்மை தெளிதல் மனத்திற்கு இயலுவதில்லை யாதலால், 'மனத்தின் செய்கை மற்றிதுவே' (கோயில். 32) எனவும் கூறுவது இதற்குப் போதிய சான்றாகும். இவ்வாறே உயிர்கள் பலவாய்த் தம்முள் பலவேறு வகையால் ஒன்றினொன்று ஒவ்வாத வேற்றுமை கொண்டு நிலவுவதை' 'யாக்கையி லியங்கும் மன்னுயிர், உருவினும் உணர்வினும் உயர்வினும் பணியினும், திருவினும் திறலினும் செய்தொழில் வகையினும், வெவ்வேறாகி வினையொடும் பிரியாது, ஒவ்வாப் பன்மை' (ஒற்றி. 4) என ஆராய்ந்து வகுத்துக் காட்டுவர்.

இவ்வாறு பொருள்களின் குணஞ் செயல்களைப் பகுத்துணர்ந் துரைக்கும் பண்புடைப் புலமை சிறந்த பிள்ளையார், தத்துவ ஆராய்ச்சியில் தலைப்பட்டு மனத்தின் இயல்பும், அஃது இறைவன் வழிபாட்டில் அமைய வேண்டிய அமைதியும் கண்டு, ஓரிடத்தில் அழகுறக் கூறுகின்றார். பிறப்பு இறப்புக்களால் உயிர்கள் எய்தும் துன்பத்தை இறைவனொருவனே அறிவன்; பிறப்பற வேண்டின் இறைவனைப் பற்றி யல்லது அது கைகூடாது; இறைவனைப் பற்றி நிற்றற்கு ஒன்றை வேண்டுதலும் வெறுத்தலும் ஆகிய இரு செயலும் உள்ளத்தின்கண் உண்டாதல் வேண்டும்; உள்ளமோ ஐம்புலன் வழிநின்று, தானல்லாத தொன்றைத் தானெனநினையும் தன்மையதாகும்; இது கொண்டு இறைவனை நினைப்பது எங்ஙனம் அமையும்? என்றோர் ஐயத்தை யெழுப்பி, எவ்வகையாலும், 'இறைவ, கருப்பம் கடத்தல் யான பெறவும் வேண்டும், கடத்தற்கு நினைத்தல் யான் பெறவும் வேண்டும், நினைத்தற்கு நெஞ்சு நெறி நிற்கவும் வேண்டும்' (திருவிடை. 4) என்று இறைவனை வேண்டி யமைகின்றார். (தொடரும்.)

# உள நூல்

வித்துவான் M. குஞ்சிதபாத தேசிகர், தமிழாசிரியர்,
உயர்நிலைப்பள்ளி, நன்னிலம்.

## உவமை அல்லது உருவகம்.

திருவள்ளுவர், மாணிக்கவாசகர், தாயுமானவர் முதலிய பல பெரியோர்கள், மனத்தை, உருவகமாகவோ அல்லது உவமையணியாகவோ காரணங்கருதிக் கூறியுள்ளார்கள். அவையாவன :—

(1) செருக்குற்றிருத்தலால் யானை எனவும்,

(2) கடவுளீடுபாட்டில் கரையாததால் மரம், இரும்பு, கல், எனவும்,

(3) ஈரிடங்களிற் சென்று சென்று பற்றுவதால் குழல் எனவும் (காடா)

(4) பல இடங்களிலும் தாவுதலால் குரலிடு எனவும், பல இடங்களுக்கும் விரைந்து செல்வதால் பறவை எனவும், உருகுகின்ற தன்மையால் அனலிடைப்பட்ட மெழுகும் நிணந் தீயிலிட்டன்ன எனவும்,

(5) போய்ப்போய்த் திரும்புவதால், இருதலைக் கொள்ளி எறும்புபோல் எனவும்,

(6) பல எண்ணல்களால் சுற்றுவதால்—காற்றாடி எனவும்,

(7) பல பொருள்களையுந் தன்னுட்டருதலைப் பார்த்து மகிழுவதால் கண்ணாடி எனவும்,

(8) பல பொருள்களையும் சுமந்து செல்வதால் தோணி எனவும் வருதலை,

1. "அளற்றிலானை" ஞானவாசிட்டம் 510.

2. "தன்னெஞ்சம்..............வன்னெஞ்சோ இரங்காத மரநெஞ்சோ இரும்பு நெஞ்சோ வைரமான கன்னெஞ்சோ"

தாயுமானவர்

3. 'பாவிடையாடுங் குழல்போற்கரந்து பரந்ததுள்ளம்'

திருவாசகம்

"பாலிற் குழல்போல நின்றுழலுங் கொள்கைத்தே
பூவின்
நிழலபோலுந் தண்குடையானெஞ்சு"

நளவெண்பா

4. "தம்மாலுறைகூடகல் புள்ளெனத்தாவுநெஞ்சம்",

ஞானவாசிட்டம்

5. "தழலது கண்ட மெழுகதுபோலத்
தொழூதுளம் உருகி"

திருவாசகம்

"நிணந்தீயிலிட்டன்ன நெஞ்சினார்க்கு"

திருக்குறள்

6. "நான்....... ............................இருதலைக்கொள்ளி யினுள்ளெறும்பு போலத் திரிதரும் பேருமென்னெஞ்சு"

முத்தொள்ளாயிரம்

7. "ஆடிய கறங்குபோல் ஓடியுழல்சிந்தையை;"

தாயுமானவர்

8. "சிதறிய கதிர் செறிந்து திரளவைத்த
சிற்றுடியின் மையம்"

மனோன்மணீயம்

9. "மனமெனுந்தோணி பற்றி"

தேவாரம்

என வருவனவற்றுற் கண்டு களிக்க.

# சித்தலைச் சாத்தனார்.

(வேலூர்க் காரழகன்)

மூவியலை முழுமையுடன் பெற்று மாயாது வளர்ந்து வளமுறும் மாண்புடை மொழியாம் முத்தமிழுக்குத் தகவுடைய பேரிலக்கியங் கண்டு செந்தமிழின் செழுமையைச் செழிக்கவைத்த பெருஞ் சிறப்பு சாத்தனாருக்குண்டு.

மணம் புரியாது, ஒழுக்கத்தினெறி லாய்த்திகழ்ந்து, தந்தைக் குற்ற கொடுங்கொலையை எண்ணி, உலகியலூறுடைத்தெனத் தேர்ந்து, அருளே உருவாய புத்தனடி நின்றொழுகி ஐந்து சீல ஒளியாக ஒளிர்ந்த அறவணடிகளை யடைந்தருள் பெற்று, பழம் பிறப்பில் கொழுநன் னாகியோன் இப்பிறப்பில் காதலித்துக் கொலையுண்டதைக்கண்டு, கொடுந்துயருக் கிரையாகி, துறவே தகவுடைத் தெனத் தெளிந்து மாதவம் புரிந்த மணிமேகலையின் பெயரையே வைத்து, தெளிவும், விளக்கமும், ஆற்றொழுக்கும் களிப்பும் மலிந்த இன்புறு மினிய தமிழ் நடையில் பீடுறும் பேரிலக்கியத்தை யாத்து அதில் உயரிய ஒழுக்கத்தையும்—தகவுடைய துறவையும்—கற்பின் சிறப்பையும்—புத்த நெறியின் பொலிவையும் சாத்தனார் உயர்வுட னொளிர வைத்த தோடல்லாமல், மணிமேகலையைப் பயந்த மாதவி, அரசர்க்குரிய கூத்து—அனைவர்க்கு முரிய கூத்து—உருகிப் பெருகி உளங் குளிரவைக்குமிசை—தாளவழி வரும் ஏழு தூக்குகள்—குழலூதல்—வாச்சிய மிழற்றல்—பிறரறிந் ததை யறியு மாற்றல்—ஓவியப் புலமை—நிமித்திக இயல்—அடுக்குச் சொற்களை முடுக்குடன் மொழிதல்—அறுபத்து நான்கு கலைகள்—இன்ன பிற இனிதே கற்றுத்

துறைபோயவ ளென்றுணர்த்தி, பரத்தையர் மரபில் வரினும் தலைவனிறந்த பின்னர் இன்னுயிரிழக்கவில்லை யென்று அவள் வருந்தியதை சாத்தனுர் விளக்கி, மாதவியின் புற எழிலைக் கூருது அவள் மாட்டுத் துளக்கமற விளங்கிய கலையியல்களைக் கனிவுடன் கூறி அனைவரையும் கலக்கண் கொண்டே பார்க்கத் தூண்டி, கலையும்—கற்பும் ஒருங்கே திரண்ட கலைக்கற்பினள் என்று உணர்த்தியதின் பெருமை என்னே !

எழிலே உருவான மணிமேகலை ஒருவனுடன் வாழ்ந்து மகிழும் இளம் வயதில் உலகியலை வெறுத்து மலர் வனம் சென்றதைக்கண்ட எட்டிக் குமரன் என்ற செட்டி மகன் தன் காதற் பரத்தையுடன் வீற்றிருக்கையில் பெரிதும் வருந்தி உள்ளம் உருகி மனம் அனலாகித் துயரம் பெருகவே தன் மாட்டிருந்த யாழை, பகைமைக்குரிய ஆரும் நரம்பை மிழற்றிக் கொண்டிருக்கையில், ஊரைக் காணவந்த உதய குமரன் செவியுற்று, நாட்டிற்கு யாது குறை உற்றுள தென்று வினவுங்கால், மணிமேகலை மலர் வனம் சென்றமைக்கு வருந்தியதாக விடை பெற்றமை யொன்றே, பழங்காலத்தில் தமிழருடைய இசையின் பெருமையை சீத்தலைச் சாத்தனுர் இனிதே விளக்குவதுடன், காதல் பரத்தையுட னிருப்பா ெனருவனுக்குப் பிற பாவைய ரெழிலாகத் தோன்ற லரிதெனினும், மணிமேகலையின் பேரழகுக்கு எட்டிக் குமர னிரையானதை சாத்தனுர் விளக்குவதால் மணிமேகலை அழகின் பிழம்பன்றோ !

மனமுடைந்த மணிமேகலை மலர்வனம் போந்து மலர் கொய்து கொண்டிருந்த ஞான்று உதய குமரன் விரைந் தோடி மணிமேகலையை யடைய விழைகையில், உட னிருந்த தோழி தேவந்தி, மணிமேகலையைப் பளிக்கறையில் வைத்துப் பாதுகாத்து, வினையால் வந்த உடல் வினை வழியழியுமென்றும், நறுநாற்றமுடைய பொருள்கள் பூசவில்லையெனில் அவ்வுடல் புறத்திடும் புலாலுக் கொப்பாகு

மென்றும், பற்றும் குற்றமும் உறைந்து கிடக்கும் கொள் கலமே உடலென்றுரைத்து, உடலினிழிவை விளக்கி அரசனை வெளியேற வைத்த பெருந்தகைமையைச் சாத்தனுர் விளக்கி, நட்பின் ஒளியை ஒளிர வைத்ததின் பெருமை என்னே ?

உதய குமரனுல் நிகழவிருக்கும் ஊறுக் கிரையாகாது காப்பான் வேண்டி மணிமேகலா தெய்வம், மணிமேகலையை எடுத்துச் சென்று மணி பல்லவத்திடைத் தன்னந்தனியே வைத்த ஞான்று, மணிமேகலை மயக்கந் தெளிந்து விழிப் புற்றுச் சுதமதியைக் காணுமையாலும், தான் தனியாக இருப்பதையும் எண்ணி விம்மிக் கலங்கிய காலத்து, புத்தன் பீடிகை தோன்றியதைக் கண்ட மணிமேகலை மிகவும் மகிழ்ந்து தான் முன் பிறப்பில் இராகுலனுடன் வாழ்ந்ததையும், திட்டிவிட முண்டமையால் இராகுலனிறந்த பொழுது தானும் அனலில் புகுந்தமையையும், அவ்விராகுலனே இப்பிறப்பில் உதய குமரனென்றதை நன்குணர்ந்தமையையும் சாத்தனுர் சீர்பெற விளக்கி, புத்த பீடிகை பழம் பிறப்பை உணர்த்தியதின் உயர்வை உயர்வுடன் உரைத்த சாத்தனுரின் சிறப்பை உரைக்கவும் வேண்டுமோ ?

தீவதிலகையி னுதவியால் மணிமேகலை கோமுகி என்னும் குளமடைந்து அமுதசுரபி என்னும் பாத்திரம் பெற்றதையும், பசி, குடிப்பிறப்பையும், விழுப்பத்தையும், கல்வியையும், நாணத்தையும், அழிக்கு மென்றதையும், துறவு எத்தகைய உயர்வுடையதாயினும் பசியின் முன் யாவும் அழியுமென்றதையும் இனிதே உணர்த்திய தீவ திலகையின் பெருமையை உணர வைத்த சாத்தனுர் நுண்மையாம் துறவையும் திண்மையாம் உணர்வையும் மக்கள் பற்றியே ஒழுக வேண்டுமென்ற உண்மையை விளக்கிய உயர்வு என்னே ?

மணிமேகலையும், சுகமதியும், மாதவியும் அறவண அடிகளை யடைந்த பொழுது, மணிமேகலை அடிகளாருக்கு வணக்க மறிவித்துத் தன் தாய் தந்தையருக்குற்ற கொடுமைகளையும், உதய குமரனுல் நிகழ்ந்த தொல்லையையும் கூறிய பொழுது அறவண அடிகள் மணிமேகலையின் உரமுடைய துறவுக்குப் பாராட்டி, புத்தனருள் உலகில் உயர்வுருமல் அழிவுறுவதினின்று சாத்து, புத்த அறத்தை அவனியில் நிலவவைத்து, பசிநீக்கி, உளங்குளிர உணவளித்துயிரினங்களை ஓம்பவல்ல உயர்பெருஞ் சிறப்பே தலையாய துறவு என்று, இப்பெரும் பணியை ஆற்றுவதே மணிமேகலையின் பெருங்கடனென்று அறைந்ததை சாத்தனர் துளக்கமற விளக்கி அருளால் உயிர்வளருமென்றும் உணவால் உடல் வளருமென்றும் உரைத்து இவையே புத்த நெறியென்று பிறங்க வைத்ததின் பீடு என்னே!

பசியொழிக்கும் வரம் பெற்றிருப்பினும், வழங்க வழங்க உணவு வளரும் பெற்றிமையுடைய பாத்திரம் பெற்றிருப்பினும் துறவே உருவாகி புத்தனருளே ஒளியாகி உயர்வுடன் மிளிர்ந்த மணிமேகலை பத்தினிப் பெண்டீரிடத்துப் பிச்சை ஏற்க முந்துங்கால், தலைவனிறந்த செய்தியை யறிந்து அழலில் மகிழ்வுடன் புகுந்தபொழுதும் உடலும், மலரும், சாந்தும் வாடாமல் தலைவ னிறக்கவில்லை என்ற அசரீரிச் செய்தியைக் கேட்டு அழலிலிருந்து நலமுடன் வெளிப்போந்த ஆதிரையையெய்தி அவள் மாட்டுப் பிச்சை யேற்ற பெருமையை சாத்தனர் விளக்குகையில் எத்தகைய உயரிய துறவியாயினும் பத்தினிப் பண்புக்கு மேலானவை யாதுமில்லையென உணர்த்திய கற்பின் பெருமை என்னே!

மணிமேகலை உணவளித்து உயிரினங்களை உவகையில் மூழ்க வைத்து உலக அறவி போந்தபொழுது உதயகுமரன் கண்டு உரையாடுகையில். உலகமவல மலிந்ததென்றும், மக்கள் பிறந்து முதுமையெய்தி நோயால் நலிந்து இறக்கிருர்களென்றும், உடம்பு இடும்பையைத் தாங்கும் கொள்கலமென்றும், ஆதலால் வாழ்வு அறப்பணியாற்றுதற்கன்றி வேறென்றுக்கு மில்லையென் றியம்பி, கோயிலினுள் நுழைந்து விஞ்சை மந்திரத்தால் காயா சண்டிகை உருவெய்தி மறையவே, உதய குமரனும் உள் நுழைந்து, மணி

மேகலையைக் காணும்வரை பாடு கிடப்பதாகச் சூளுரை கொண்டபொழுது, அவணிருந்த தெய்வம், 'ஆராயாமல் சூளுரை கொண்டீர்,' என உரைத்ததைச் செவியுற்று வியந்து புதுமையுளதெனத் தெளிந்தான். காயாசண்டிகை உருவத்துடன் விளங்கியதால், காஞ்சனன் மணிமேகலை யுடன் உரையாடியும் பதில் பெறுமையால் பெரிதும் வருந் தியதுடன் மணிமேகலை (காயாசண்டிகை உருவத்துடன்) உதய குமரனிடம் உரையாடுகையில் ஒரு மூதாட்டியைத் தன்பால் வைத்துக்கொண்டு, காமமே உருவாயமைந்த உதய குமரனுக்கு உயர்வுரை உரைக்கையில் கரிய கதுப்பு வெண் கதுப் பாயிற்றென்றும், அன்றைய மதிமுகம் இன்று மறைந்ததென்றும், அன்றைய வில்லொத்த புருவம் இன்றெங் கேகிற்றென்றும், அன்றைய கட்டுடல் இன்று வருல் மீனின் வற்றலாயிற்றென்றும், அன்றைய கழுநீர் போன்ற விழியில் இன்று வழுநீர் ஒழுகுகிறதென்றும், அன்றைய குமிழ் மூக்கில் இன்று சீழ் ஒழுகுகிறதென்றும், அன்றைய முத்தொத்த பற்களால் மிளிர்ந்த புன்முறு வலும் செவ்விதழும் இன்று எங்கேகினவென்றும், புண் ணுடைய புலால் நாற்றம் போன்றதன்றோ இவ்வுட லென்றும், கண்கவரும் கட்டுடைய கொங்கைகள் வெறும் பைபோல் வீழ்ந்தன வென்றும், பூவாலும், சாந்தாலும் உடலை அழகுறவைப்பினும் காலம் ஆகஆக அழகு அழிந்து பொலிவு குன்றுமென்றும், உடலினிழிவை விளக்கியதை யறிந்த காஞ்சனன், தன் மனைவியை உதயகுமரன் அடைந் தானென்று தவறாக எண்ணி வாளால் வெட்டியதால் உதய குமரனிறந்ததும் காயா சண்டிகை வேடத்துட னிருந்த மணிமேகலையிடம் சென்றபொழுது, கந்திற்பாவை எச்சரித்து 'அணுகாதே' என்றாணையிட்டுக் காயாசண்டி கையை விந்தாகடிகையெனும் தெய்வமெடுத்துச் சென்ற தென்றும், ஊழ்வினையால் உதயகுமரன் இறந்தானெனி னும் கொன்றது குற்றமென்று கூறியதை எண்ணுங்கால் வினை பல பிறப்புக்களிலும் தொடருமென்பதுடன் உட லின் நிலையாமையையும் புறஅழகின் அழிவையும் அணங்கு அறைந்ததின் அருமையை சாத்தனாரன்றி எப்புலவர் விதந்தோதி யுள்ளார்?

உதய குமர னிறத்தமைக்கு வருந்தி, கொண்ட காயா சண்டிகை உருவம் தான் அவலத்திற்குக் காரணமென்று

துயருற்று உருவத்தை மாற்றித் துயர்க் கடலில் தோய்கை யில், கந்திற்பாவை, சென்ற பிறப்பில் உதய குமரன் சோறுக்கும் ஒருவனை வெட்டியதால் அவ்வினை இப் பிறப் பில் தொடர்ந்து வெட்டுண்டானென்றும், அறத்தாலும் வினையை ஒழிக்க வியலாதென்றியம்பி, மணிமேகலைக்காறு தல்கூறி, காஞ்சிமாநகர் சென்று அறம்புரிய ஆணை இட்ட துடன் இடையில் சிறைப் பட்டுழல வேண்டுமென்று கூறிற்று. வினைவழியாவும் நிகழுமென்றும், அவ்வினை பல பிறப்புக்களிலும் தொடருமென்றும் வினையை வெல்ல அறத்தாலு மியலாதென்றும் மயக்க மற்ற முறையில் வினையின் வன்மையை விளக்கிய சாத்தனாரின் சிறப் பென்னே!

உதய குமரன் மரணத்திற்கு மணிமேகலையைச் சிறைப்படுத்தி இயம்பொணு இன்னல்க ளிழைத்தும், புத்தனின் மந்திரத்தால் இன்னல்களுக் கிரையாகாமல் மீண்டதையறிந்த இராசமாதேவி தன் தவறுக்கு மன்னிப் புக்கோரி மகனிறந்தமைக் கழுதபோது, முற்பிறப்பில் இராகுலன் இறந்தபொழுது தான் பெரிதும் அழுததாகவும், அதுபோழ்து இராசமாதேவி அழவில்லை என்றும், அழுவது உயிருக்கா அல்லது உடலுக்கா என்று வினவி, உடலுக் கழுவதாயின் உடலை ஏன் இடுகாட்டி விடுகிறார்களென் றும், உயிருக் கழுவ தாயின் உயிர் வினைவழிச் செல்வதை உணர்தலரிதென்றும், உயிருக் கன்புடையவராயின் எல்லா உயிர்களுக்கு மிரங்கவேண்டுமென்றும் உயிரினியல்பை மணிமேகலை விதந்தோதியதை, சாத்தனார் துளக்கமற விளக்கித் தெளிவைத் தோற்றுவித்ததின் தகவு என்னே?

இராசமாதேவியிடமிருந்த மணிமேகலையைக் காணச் சித்திராபதியும் மாதவியும் அறவண அடிகளை அழைத்துச் சென்ற பொழுது இராசமாதேவியார் அடிகளாருக்குப் பீடுடன் நல்லிடம் நல்கி நல் வணக்கத்தை நவின்று பல் லாண்டு பாரில் வாழ வாழ்த்தியமைக்குத் தவம் புரிந்தமை யால் மாலைக் கதிரவனை யொப்பதாகவும், பிறத்தலும், மூப் படைதலும், இறத்தலும், உடலுக் கியற்கையென்றும், பேதமை—கர்மம்—உணர்வு—அருவுருவு—வாயில்—ஊறு நுகர்வு—வேட்கை—பற்று — பவம்— தோற்றம்—வினைப் பயன் இவை யனைத்தையு மறிபவர் பேரறிவரென்றும்,

அறியவில்லையாயின் ஆழ்ந்த நரகத்தையறிந்தவராவரென் றும், இவ்வுலகம் எல்லையற்றதென்றும், உயிரினங்களறு வகை என்றும், உயிரினங்களனைத்திற்கும் இருவினைக ளுண்டென்றும், வினைக்கிடாகக் கருக்கொண்டுலகிலுலவ வேண்டுமென்றும், வினைப்பயன் விளையும்பொழுது இன்ப மும் துன்பமும் தோன்றுமென்றும், கொலை—களவு—காமம் — பொய் — கோள்—கடுஞ்சொல் — பயனிலசொல் —விரும்புதல்— வெகுளல் — பொல்லாக் காட்சி — ஆகிய இப்பத்தும் தீவினை என்றும் இத்தீவினையை யுணராதவர் விலங்காகவும், பேயாகவும், நரகராகவும விளங்குவரென் றும் இப்பத்துப் பாவத்திலின்று விலகி, பஞ்சசீலம் தாங்கு பவர் இன்பத்தைத் துய்ப்பரென்றினிதே இயம்பிய அடிக ளாரின் அரும் புத்தக் கொள்கையைச் செழுமையுடன் தண்டமிழ்த் தங்கக் கோலால் இலக்கிய ஓவியமாக்கிய சாத் தனாரின் சால்பென்னே!

மணிமேகலை புண்ணியராசனைக் கண்டு புத்தனருளைப் பகர்ந்து, அரசனின் முற்பிறப்பை மொழிந்தமையால், அரசன் விழிப்பெய்தி நிலையாமையை நன்குணர்ந்து மணி முடியும்— செங்கோலும் — சிம்மாசனமும் —வாழ்வுக்குப் பயனில்லை யென்றுணர்ந்து, இசையும், நாடகமும், காம மும் பலனில்லை எனத் தெளிந்து பற்றறுத்தலே பீடுடைத் தென உணர்ந்து புத்தனடியைப் பின்பற்றிய பெருந்தகை மையை விளக்கப் போந்த சாத்தனார் அரச வாழ்வினும் துறவு வாழ்வே சிறந்ததென்று விளக்கிய சீர்மை என்னே!

மணிமேகலை சேரநாடு போந்து பத்தினிக் கடவுள் கண்ணகியை வழிபட்டு, தலைவனிறந்த பொழுதே இற வாமலும், நற்றவம் புரியாமலும், கற்புக் கடன் முடித்த மையை விளக்க வேண்டுமாறு கேட்டமைக்கு, தலைவனுக் குற்றக் கொடுமையால் தனக்கு உள்ளம் கொதிப்புற்ற தென்றும், மதுராபதி தெய்வம் பழைய வினைக்கேற்ப யாவும் நடந்தனவென்று கூறியும், அவைகளுச்கு உடன் படாமல் மதுரையை யழலாக் கினதாகவும், நல் வினை யாலே விண்ணகம் புகுந்தாலும் மதுரையை யழித்த தீவினை தொடருமென்றும், தேவருலகில் நல்வினையின் றேல் மீண்டும் மண்ணுலகில் பிறந்துலழல வேண்டுமென் றும் கூறியதை கூர்ந்து ஆராயுங்கால் தேவவுலகத்தினும்

மண்ணுலகமே சிறந்ததென்று சிந்திக்கச் சிந்தனை வித்தை சாத்தனார் அனைவருள்ளத்தில் இட்ட இனிமை என்னே!

பத்தினிக் கடவுள் கண்ணகி, கபிலையம்பதியில் போதி மரத்தடியில் புத்த ஞாயிறு தோன்றுமென்று கூறி, நால் வகைச் சத்தியங்களையும் அவற்றின் அழிவுகளையும் மணி மேகலைக்கு விளக்கி, சக்கர வாளமுழுதும் தரும ஒளி ஒளிர்கையில் தானும் நன்மொழிகேட்டு நிருவாண மடைவ தாகவும் புத்த நெறியையே கடைபிடித்து ஒழுக வேண்டு மென்றுரைத்ததை எண்ணுங்கால், கண்ணகி புத்தநெறி ஒழுகினவளென்று சாத்தனார் இனிதே இயம்புகிறார்.

மணிமேகலை கஞ்சிமாநகர் சென்று, பட்டினியாலும், பசியாலும் அவலமெய்திய மக்களுக்குணவு நல்கி உவகை யுறவைத்து புத்த நெறியே பீடுடைத்தென்றும், மன் னுயிர்க்கெல்லாம் உணவும்–உடையும்–வீடும் அளித்தலே அறமென்றுரைத்து, அறவண அடிகளை அடைந்து உண் மைப் பொருளை யுணர்த்துமாறு வேண்டிய பொழுது, மாரனைவென்று, காமம், வெகுளி, மயக்கம், இம்மூன்றினை வெல்ல வேண்டுமென்றும், தீவினைக்குரிய பத்து பாவங் களைக் கடந்து, பஞ்ச சீலத்தைப் பற்றி, பற்றறுத்து, செற்றம் சிதைத்து, நற்பொருளறிந்து, மயக்கம் மாய்த்து, புத்தநெறி ஏகல் வேண்டுமென்று கூறி, "உன்மனத்திரு ளிரிக; பலத்திறமறுக," என உரைத்து மணிமேகலையை மாண்புற வைத்த அடிகளின் அருளுரையைச் சாத்தனார் செம்மையுடன் விளக்கிய சீர்மை என்னே!

செந்தமிழின் செழுமையையும், மணம் புரியாது துறவு பூண்ட மணிமேகலையின் மாண்பையும், ஆதிரையின் அருங் கற்பின் திண்மையையும், உயிரினியல்பையும், பசி நீக்கி உணவளித்தலே பேரறமென்றும், பஞ்ச சீலமேற்றுப் பீடுறல் வேண்டுமென்றும், புத்த நெறியே சால்புடைத் தென்றும், பற்றறுத்தலே பிறவியின் நோக்கமென்றும் இனிதே இயம்பி ஏனையோரையு மேமமுறவைத்த சாத்த னார் வாழ்க.

40 ஆம் பக்கத் தொடர்ச்சி.

இராமனே 'எண்ணி வலித்தனன்' எனக் கம்பரே கூறுவதால், இராமன் எண்ணினது என்ன? இம்சை முறையா? அகிம்சை முறையா? 'ஆரியன் அவன் ஆவி அகற்றுவான் எண்ணி வலித்தது' அகிம்சை முறை என்னலாமா? அவன் ஆவியை எதனுல் அகற்றுவது? ஸ்ரீமந் நாராயணனுடைய திருவுந்தியில் தோன்றிய நான்முகனது பிரும்மாத்திரத்தைக் கொண்டகற்றுவது. ஏன் பிரும்மாத்திரத்தைக் கொண்டகற்ற எண்ணினுன்? இராவணனுக்கு மூன்று கோடி வாழ்நாள் கொடுத்த பிரம்மதேவனது படையைக் கொண்டே இராவணனைக் கொல்ல எண்ணினுன். எத்தேவர் படைகளைக் கொண்டு கொல்ல வேண்டுமென்பதை எண்ணி எண்ணிச் சிந்தித்துச் சிந்திந்து, முடிவில் பிரும்மதேவனது படையைக் கொண்டே அவன் ஆவி அகற்றல் வேண்டும் என்பதற்காக 'வலித்தனன்' என்பதை 'எண்ணி வலித்தனன்' எனக் கம்பரும் எண்ணி வலித்துக் கூறுவாராயினர்.

இராமன் விட்ட பிரும்மாத்திரம் இராவணனிடம் தனித்துச் செல்லும் ஆற்றலில்லாமை கருதியோ, இராவணனது மார்பின் வன்மையைக் கருதியோ, மகாவிஷ்ணுவினது சக்கரப்படையின் ஆற்றலையும் துணையாகப் பெற்றுக்கொண்டு இராவணனது மார்பில் புக்கதாகக் கம்பர் கூறுகினுர்.

அழிக்கும் கடவுளாகிய பரமசிவனின் பாசுபதாத்திரத்தின் துணைவேண்டாமல், ஆக்கும் கடவுளும காக்கும் கடவுளும் ஆகிய நான்முகன் திருமால் இவர்களின் இருவகைப் படைகளையும் ஒரு வகையாகக் கொண்டு, இராவணன் மார்பில் இராமன் அத்திரம் விடுத்தான் எனக் கம்பர் கூறுவாரே யாகுல் கம்பருக்கும் காந்தீயத்திற்கும் உள்ள தொடர்பு எத்தகைய தென்பதை அறிஞர்களே ஆராய்க.

## இராமனது புனிதவாளி

கம்பராமாயணத்தில் சிகரம் போன்ற செய்யுட்கள் பலவுள்ளன. அவற்றுள், இராம பாணம் இராவணனது மார்பில் சென்றதைக் கூறும் செய்யுளும் அதைத் தொடர்ந்த மற்றைய செய்யுட்களும் சிறந்தன; கலை நலம் நிரம்பியன; களிப்பையூட்டுவன. சுவைத்துக் காண்போம்.

முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும்
முதல்வன் முந்நாள்

**எக்கோடி யாராலும் வெலப்படாய் எனக்கொடுத்த**
**வரமும் ஏனைத்**
**திக்கோடும் உலகனைத்துஞ் செருக்கடந்த புயவலியும்**
**தின்று மார்பில்**
**புக்கோடி உயிர்பருகிப் புறம்போயிற்று இராகவன்றன்**
**புனித வாளி**

இராவணனது மூன்று கோடி வாழ்நாளும், தவமும், வரமும் புயவலியும், தின்றதோடு அமையாமல், மார்பில் புகுந்து, உயிரையும் பருகிவிட்டு, உள்ளேயும் தங்காமல், இராமனது பாணம் புறத்தே போயிற்று. இவ்வாறு புறத்தே போன பாணத்தைக் காந்தீயத்தைக் கருத்தில் கொண்ட கம்பர், 'புனித வாளி' என்பாரா என்பதை ஆராய்க.

இவ்வாறு சென்ற புனித வாளியைக் கண்டு,

**ஆர்க்கின்ற வானவரும் அந்தணரும்**
**முனிவர்களும் ஆசி கூறித்**
**தூர்க்கின்ற மலர்மாரி தொடரப்போய்ப்**
**பாற்கடலுள் தூநீராடித்**
**தேர்க்குன்ற இராவணன்றன் செழுங்குருதிப்**
**பெரும்பாவைத் திரைமேல் சென்று**
**கார்க்குன்றம் அனையான்றன் கடுங்கணைப்புட்**
**டிலின்நடுவண் காந்த தம்மா !**

இராவணனது மார்பில் புகுந்து, உயிரைப் பருகிப், புறத்தே சென்று, பாற்கடலுள் தூநீராடிய இராமபாணம், இராமபிரானது அம்புப் புட்டிலில் வந்து சேர்ந்தது. இராவணனின் உயிரை உண்ட இராமபாணத்தைக்கண்டு, ஆரவாரித்த வானவரும், அந்தணரும், முனிவரும் ஆசி கூறினார்கள் ; மேலும், அப்பாணத்தின்மேல் மலர்களைத் தூவினார்கள். இங்கு ஆராய்வதொன்றுண்டு. என்ன? அப்பாணத்தைக் கண்ட வானவர், அந்தணர், முனிவர் எதற்காக ஆரவாரித்தனர் ? எதற்காக ஆசி கூறினர் ? எதற்காக மலர் மாரி தூவினர்? இம்சை என்று கருதியா ? அகிம்சை என்று கருதியா ? ஓர் உயிரைக் கொல்வது அகிம்சை என்று கருதுவரா ? இம்சை என்றே கருதினர். அவ்விம்சையில் விளைந்த பலனைக் கருதியே ஆர்த்தனர் ; ஆசி கூறினர் ; மலர் மாரி தூவினர்.

## இராமன் கண்ட இராவணன்

இராம இராவணர்களின் இறுதிப்போர் ஆகாயத்தில் நடந்தது. 'போர் நின்ற விழி நின்றும் பொறி நின்ற புகை யோடும் குருதி பொங்கத் தேர் நின்று, நெடு நிலத்துச் சிரமும் கீழ்ப்பட விழுந்தான் சிகரம் போல்வான்'. இறந்து விழுந்து கிடந்த இராவணனது முகங்களின், உயிர் துறந்த முகங்களின் பொலிவைப்பற்றிக் கம்பர் சொல்லும் பொலிவு, கலை யுலகில் கம்பருக்குள்ள அதிமேதையின் பொலிவைக் காட்டுவதாகும். அப் பொலிவுள்ள முகங்களைக் காண்போம்.

**வெம்மடங்கல் வெகுண்டனைய சினமடங்க,**
**மனமடங்க, வினையும் வீயத்,**
**தெம்மடங்கப் பொருதடக்கைச் செயலடங்க,**
**மயலடங்க, ஆற்றல் தேயத்,**
**தம்மடங்கு முனிவரையும் தலையடங்க, நிலை**
**யடங்கச், சாய்ந்த நாளின்,**
**மும்மடங்கு பொலிந்தனவம் முறைதுறந்தான்**
**உயிர் துறந்த முகங்கள் அம்மா !**

இங்குக் கம்பர் காட்டும் இராவணனது முகங்கள் உயிர் துறந்த முகங்களா? உயிர் துறவா முகங்களா? என வியப் பெய்துகின்றோம். ஏன்? இராமனது பாணத்தின் வேகம் உயிர் துறந்த முகங்களாகச் செய்தது. கம்பரது செய்யுளின் பொலிவு உயிர் துறவா முகங்களாகச் செய்கின்றது.

மேலும், இராமனது முகத்தினினும் இராவணனது முகம் பொலிந்தது என்னும் கம்பரது கொள்கையின் கலை நிரம்பிய கவியைக் கண்டு களிக்க வேண்டாமா? நாட்டை விட்டுக் காட்டிற்குப் போக வேண்டுமெனச் சொன்னதுமே இராமனுக் குண்டான முகங்களின் பொலிவை எண்ணி, எண்ணி அசோக வனத்தில்,

**தெம்மடங்கிய சேணிலம் கேகையர்**
**தம்மடந்தைதன் தம்பிய தாம் என**
**மும்மடங்கு பொலிந்த முகத்தினன்**
**வெம் மடங்கலை உன்னி வெதும்புவாள்**

எனச் சீதையின் செவ்வாயில் மொழிந்த கம்பர் மறவாமல் அதே

எதுகை மோனைகளை எடுத்து 'வெம்படங்கல்' என்ற செய்யுளில் கம்பர் தமது கருத்தாகச் சொல்வதின் பொலிவென்ன? இராமனது தியாக வீரத்தினும் இராவணனது மரண வீரம் புந்தியில் பொலிர்ந்தது போலும்!

இராமன் இராவணனைக் காணுதலை, 'மீது அலைத்த இரத்தத்தின் பெருந்தாரை விசும்பு அளப்பக் கிடந்த இராவணனது மேனி முழுவதையும், காதலித்த உருவாகி அறத்தை வளர்க்கும் கண்ணுளனாகிய இராமன் தெரியக் கண்டான்' என்றும், தம்பியோடு படைத் தலைவர் எவரும் தன்னைச்சுற்றி வரப்போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங்கொடாப் போர்வீரன பொருதுவீழ்ந்த சிரினையே மனமுவப்ப, உருமுற்றும் திருவாளன் தெரியக் கண்டான். என்றும்,

> தோடுழுத நறும்தொடையல் தொகையுழுத
> இளைவண்டின் சுழியத் தொங்கல்
>
> பாடுழுத படர் வெரிந்இன் பணியுழுத
> அணிநிகர்ப்பப் பணைக்கை யானைக்
>
> கோடுழுத நெடுந்தழும்பின் குவைதழுவி
> எழுமேகக் குழுவின் கோவைக்
>
> காடுழுத கொழும்பிறையில் கறைகழன்று
> கிடந்தனபோல் கிடக்கக் கண்டான்.

என்றும் கூறுகின்றனர்.

இங்ஙனம் இராவணன் இறந்துகிடப்பதைக் காணும் இராமனது காட்சியை ஒருமுறைக்கு மும்முறை 'தெரியக் கண்டான்; தெரியக் கண்டான்; கிடக்கக் கண்டான்.' எனக் கம்பர் கூறும் புதைபொருளை ஆராய்தல் வேண்டும். கம்பர் தமது கலைப் புலத்தில் மும்முறைக்கு நான்கு முறை உழுது உழுது காண்பிக்கும் செய்யுள் விளை பொருளை நாமும் ஆய்ந்த அறிவில் காணல் வேண்டும், காணின், இராவணனது மார்பில் திசை யானைகளின் கொம்புகள் உழுத தழும்புகள் இருந்தன என்பது தெளியப்படும். தெளிந்த இராமனே முதுகில் தழும்புகள் உள்ள இராவணனைக் கொன்ற தனது வீரச் செயல் செம்மையுடையது அல்ல என மனதிற் கொண்டு முறுவலுடன் மொழிவதானன். அம் முறுவல் மொழிகளே ஆத்தானத்தார் ஆராய்ச்சியாகும்.

### ஆத்தானக் கவிஞரின் ஆராய்ச்சி

வென்றியால் உலகம் மூன்றும் மெய்ம்மையான் மேவி ைலும்
பொன்றினுன் என்று தோளைப் பொதுவற நோக்கும் பொற்பும்
குன்றி ஆசுற்றது அன்றே இவன் எதிர்குறித்த போரில்
பின்றியான் முதுகில்பட்ட தழும்புள பிழைப்பின் அம்மா!
கார்த்தவீரியன் என்பானல் கட்டுண்டான் என்னக் கற்கும்
வார்த்தையுண்டு அதனைக் கேட்டு நாணுறும் மனத்தினேற்குப்
போர்த்தலைப் புறகிட் டேற்ற புண்ணுடைத் தழும்பு போலாம்
நேர்த்ததும் காணலுற்றது ஈசனுர் இருக்கை நீக்க
மாண்டுஒழிந்து உலகில் நிற்கும் வயங்குஇசை முயங்க மாட்டாது
ஊண்தொழில் உகந்து தெவ்வர் முறுவல்என் புகழை உண்ண
பூண்தொழில் உடைய மார்பா! போர்ப்புறம் கொடுத்தார்ப் போன்ற
ஆண்தொழி லோரில் பெற்ற வெற்றியும் அவத்தம் என்ருன்.

இம் மூன்று செய்யுட்களையும் தமது முடிவான ஆராய்ச்சிக்குப் பெருந் துணையாகக் கொண்டு ஆத்தானக் கவிஞர் கூறுவதாவது :—

'இராவணனைக் கொன்ற வென்றியால் உலகம் மூன்றும் மெய்ம்மையால் மேவினுலும், இராவணன் பொன்றினுன் என்று அவனைப் பொன்றுவித்த தனது தோள்களை நோக்கும் பொற்பும் குன்றி மாசுற்றது' மேலும் 'நாணுறும் மனத்தையுடைய எனக்கு இந்த இராவணனைக் கொன்றது போர்க் களத்தில் புறமுதுகிட்டு ஏற்ற புண்களின் தழும்புகள் போன்றனவாம்' ஆகையால், உலகில் நிற்கும் வயங்கு இசை எனனை முயங்க மாட்டாது. உண்ணுதல் தொழிலை உகந்து, பகைவரின் முறுவல் என் புகழை உண்ண, போரில் புறங்கொடுத்தாரைப் போன்ற வெற்றியும் அவத்தம் என இராமன் சொன்னுன். எனவே, இராமன் இராவணனது இறந்த உடலைக் கண்டு மிகவும் வருத்த முற்று, இந்த இராவணனை அகிம்சை முறையில் திருத்தாமல் கொன்று விட்டேனே இதனல் எனது வெற்றி அவத்தமாகப் போய்விட்டதே எனக் கூறுவதினுல், கம்பர் காந்தீயத்தின் அகிம்சைப் பொருளை முடிவில் நன்ருக உணர்ந்து பாடியிருக்கிருர்' என்பதாம்.

### இராமனது வருத்தத்தின் காரணம்

இங்குக் காணும் இராமனது வருத்தத்தின் காரணம் இராவணனை அகிம்சை முறையில் திருத்தாமல் போனமைக்

காகவா ? அன்றி, இராவணனின் புறமுதுகில் பட்ட தழும்பு களுக்காகவா ? என்பதை நேர் முறையில் ஆராய்தல் வேண்டும்.

இராவணனைப்பற்றி இராமன் எண்ணியிருந்த உயர்வான எண்ணமெல்லாம் போர்க்களத்தில் யாவர்க்கும் புறங்கொடாத போர் வீரன் என்பதேயாம். இவ்வுண்மையை ஆராய்ச்சியாளர் அனைவருக்கும் தெளிவுறுத்துவதற்காகவே கம்பர், 'போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங்கொடாப் போர் வீரன்' என இராமன் இராவணன் மேல் கொண்ட உள்ளத்தைத் திறந்து காட்டு கின்றார். இராமன் இராவணனைக் காணும்பொழுது பொருது வீழ்ந்த சிரினையே காண மனமுவப்ப உரு முற்றும் காண்கின் றான். எப்படிக் காண்கின்றான்? அச்சிரினை சேர்த்துக் காணின் போரிடை மீண்டும் ஒருவருக்கும் புறங்கொடாப் போர் வீரன் பொருது வீழ்ந்த, சிரினையே மனமுவப்ப உரு முற்றும் திருவாளன் தெரியக் கண்டான்' எனக் கம்பர் இராமனுக்குக் காட்டிய இராவணனது காட்சியையே நாமும் காண்போம்.

இராவணனது முதுகில் தழும்புகளைக் கண்டவுடனே, இராவணன் யாவரிடமும் புறங்காட்டாத போர் வீரன் என்றே சுத்த வீரன் என்றே எண்ணியிருந்தேனே! இராவணன் உருவ முற்றும் தெரியக் காணிலோ, புறமுதுகிட்ட அசுத்த வீரன் என்று தெரிகின்றதே! ஓ! இவ்வாறு புறமுதுகிட்ட வீரனை யல்லவா நான் வென்றேன். புறமுதுகிட்ட வீரனை வெல்வது வெற்றியாகுமா? அது தோல்வியாகு மன்றோ? இதனை ஆய்ந்தே கம்பர் எதிராகக் குறித்த போரில் பின்னிட்டவனை-முதுகில் பட்ட தழும்புள்ள இராவணனோடு போர் செய்ததால்-உலகம் மூன்றும் மேவினாலும் அவ் வெற்றிக்குக் காரணமான தோள் களின் பொற்பும் குறைந்து மாசுற்றதாகும் எனக் கூறினர். 'மேலும் மேலும்,' போரில் புறங்கொடுத்தாரைப் போன்ற ஆண் தொழிலையுடைய இராவணனிடத்திற் பெற்ற வெற்றியும் அவத்தம் எனக் கூறினர்.

### விபீடணன் தழும்புகளுக்குக் காரணம் கூறல்

இங்ஙனம் இராமன் வருந்துவதைக் கண்ட விபீடணன் இராமனை நோக்கி, செல்வனே! செம்மை பொருந்தாத சொற்

களைச் சொல்ல வேண்டாம், நான் சொல்லும் வரலாற்றைக் கேட்பீராக. கார்த்த வீரியார்ச்சுனன், வாலி போன்றவர்களால் வெல்லப்படுவாய் எனத் தேவர்கள் இராவணனுக்குச் சாபமிட்டிருந்தார்கள். அத் தெய்வ சங்கல்பத்தின் காரணமாக இவ்விருவரிடத்திலும் இராவணன் தோல்வி யுற்றான்.

இராவணன் திசை வெற்றிக்காக உலகம் உள்ள வரையும் சென்று, பகைவர்களை வென்று, மற்றுப் பகைவர்களைக் காணகிலாமையால், மலைகள் போன்ற திசை யானைகளுடன் போர் செய்ய, அவற்றின் கொம்புகள் மார்பில் பாய்ந்து, முதுகு வரையில் சென்று முறிந்துவிட்டன. இக்கொம்புகள் அல்லாமல், பகைவரின் படைகள் இவன் மார்பில் பட்டு என்ன செய்ய முடியும்! இவ்வாறு இராவணன் மார்பில் கிடந்த கொம்புகள், அனுமான் இராவணனைக் குத்தும்பொழுது, முதுகின் வழியாகப் போய்விட்டன. தலைவனே! இவ்வாறான வடுக்கள் இராவணன் முதுகில் இருந்தனவே யல்லாமல், இவ் வுலகத்தும் மற்ற உலகத்தும் உள்ளவர்களின் ஆயுதங்கள் இராவணனது பக்கம் அஞ்சாமல் செல்லுமா? செல்லு மென்பார் உளராயின் அன்னார்க்கு யான் அறைகூவல் இதுவே. அஃதாவது:—பரமசிவனால் விழுங்கப்பட்ட விடம் பரமசிவனை விழுங்கினாலும், கருடனால் வெல்லப்படும் பாம்புகள் கருடனை வென்றாலும், எப்பேர்ப் பட்டவர்களின் படைகளும் இராவணனிடம் செல்லா. வெற்றி பெற்ற இராமனே! இராவணன் யாவராலும் வெல்லப்படான் என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்? பன்றியாகி உலகம் மூன்றையும் எடுத்த பரம்பரன் முதலான தேவர்கள் எல்லாம், எப்பொழுது எமது துன்பம் தீரும் என ஏங்கி நின்றார்கள். இன்று இராவணன் உன்னால் கொல்லப்பட்டான் என்று சொன்னாலும் நம்ப மாட்டார். பொய் என்பார்கள். இவ்வாறு இராவணனுடைய தழும்புகளையும் ஆண்மையையும் ஆற்றலையும் அஞ்சாமையையும் சுத்த வீரத்தையும் பற்றி விபீடணன் சொன்னதைக் கேட்ட இராமபிரான், 'ஆ! இராவணன் தன்மை இத்தகையதா!' என்று சொல்லிக்கொண்டு தன் மனத்திலுள்ள ஐயமும் நாணமும் நீங்கினான். பின்னர், தனது தோள்களின் அழகைப் பார்த்து மகிழ்ந்து, 'விபீடணா! இறந்தவன்பேரில் அயிர்த்தலோ, வயிர்த்தலோ தக்கதன்று; அவற்றை எண்ணவேண்டாம். நீ இராவணனுக்குச் செய்ய வேண்டிய ஈமக் கடன்களை விதிப்படி செய்வாயாக' என்றனன்.

அன்னதோ என்னா ஈசன் ஐயமும் நாணும் நீங்கித்
தன்னதோ ளிணையை நோக்கி வீடணா தக்கது அன்றால்
என்னதோ இறந்து ளார்மேல் அயிர்த்தல்நீ இவனுக் குஈண்டச்
சொன்னதோர் விதியி னாலே கடன்செயத் துணிதி என்றான்.

விபீடணன் சொன்ன சொற்றொடர்களைக் கேட்டு இராமன் ஐயமும் நாணமும் நீங்கினன் என்பதில் இராமனுக்குள்ள ஐயம என்ன? நாணம் என்ன?

ஐயம் ஆவது:—இராவணனுடைய மார்பில் தழும்புகள் உள்ளதினால் புறமுதுகு காட்டித் தோல்வியுற்றிருப்பானே என்பது.

நாணம் ஆவது:—கார்த்தவீரியன் வாலி இவர்களால் இராவணன் கட்டப்பட்டவனாகையால் ஆண்மையும் ஆற்றலும் குன்றியிருப்பானே என்பது.

விபீடணன் சொன்ன உண்மை வரலாறுகளால் இராமன் ஐயமும் நாணமும் நீங்கினன்.

கார்த்தவீரியன் என்னும் செய்யுளில் 'நாணுறு மனத்தினன்' ஆக்கிய இராமனை 'அன்னதோ என்னா ஈசன் ஐயமும் நாணும் நீங்கி' என்னும் செய்யுளில் நாணம் நீங்கிய மனத்தினன் ஆக்கும் கம்பனது செய்யுளமைப்பை ஆராயுந்தோறும் இன்பம் பயப்பதாகும். முன்பு 'பொன்றினன் தோளைப் பொதுவற நோக்கும் பொற்பும் குன்றியா சுற்றது' என வருந்தும் இராமனே, 'ஐயமும் நாணும் நீங்கித் தன் தோளிணையை நோக்கி' மகிழும்படியாகச் செய்யும் கம்பரின் கலை நயம் காணுந் தோறும் களிப்பைத் தருவதாகும்.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து கம்பரது காவிய அமைப்பும், இராவண வத அமைப்பும், அகிம்சை முறையை அடிப்படையாகக் கொண்ட காந்தீயக் கொள்கை அல்ல என்பது பெறப்பட்டது. இராவணனைக் கொன்றதினால் இராமனுக்குண்டான வருத்தமெல்லாம், புறமுதுகிட்டவனைக் கொன்றேனே என்ற வருத்தமே அல்லாமல், காந்தீயத்தின் அகிம்சை முறையில் இராவணனைத் திருத்தவில்லையே என்ற வருத்தம் அல்ல என்பது தெளியப்பட்டது. எனவே, ஆத்தானக் கவிஞர் கம்பரின் மேல் பெய்யும் காந்தீயக் கொள்கையின் அகிமசை முறை ஆராய்ச்சி சரியா? தவறா? என்பதை அருந் தமிழறிஞர் ஆராய்க; ஆராய்க.

# இந்தியக் குடியரசியலும் மக்களியல்பும்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

ஒரு நாட்டின் வளர்ச்சிவகையி லுண்டாம் சிறப்பியல்புகள் ஆட்சிமுறைகள் மூலம் புலப்படலாகும். பண்டெல்லாம் தமிழ்நாட்டவர் ஆனிரைகளைச் செல்வப்பொருள்களாக் கருதி ஆனோம்பிவந்த இயல்பால், தமிழெல்லையின் ஒரு பகுதியில் ஆனோம்புவான் ஒருகோனவனாய்நின்றான். மற்றொரு பகுதியினருடன் அறவழியிற் பொருங்காலத்து முதற்கண் ஆனிரைகளைக் கவர்ந்து கோடலும் பின் அவற்றை மீட்டுக் கோடலுமாகிய பெரு வழக்கினை, பழைய தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் ஒரு திணை யிலக்கணமாகப் பாரித்துரைப்பதின் வழி, பண்டைத்தமிழர் அறிந்து கையாண்ட ஆட்சிமுறை கோனாட்சியென முடிவு கட்டிக்கொள்ள வாய்ப்புளது. மற்றும் இவ்வாட்சி முறையில் வழங்கப்படும் இறையெனும் தமிழ்ச் சொல் கடவுளரையும் மன்னரையும் குறிப்பதினான், கடவுளராகக் கருதப்படும் மன்னரின் செங்கோல் வழி மக்கள் கீழ்ப்படிந்தொழுகும் பண்பு நிலையினையும் ஊகிக்க, உள்ளுறைக் கருத்துப் புலனாகும். இத்தகைய பண்புச் செல்வத்தையும் மரபையும் தன்னகத்தே கொண்டுள்ளது மறனிழுக்கா மானமுடைய தரசென்பது குறிப்பானறிந்துணரற்பாற்று. மன்னறத்தின் பால் வயங்கும் கண்ணோட்டமாகிய அழகிய இயல்பு தன்னரசு முறையிலும் குடியரசொற்றுமையிலும் ஒருங்கே விளங்க, உலக நடை உருவாகுமாதலான், அரசியல் மரபினையும், குடிப்பண்புச் செல்வப் புகழினையும் கறைபடாது காத்தல் எத்துணைச் சீரியது!

அரசியற் சிறப்பு துணிதற்குரிய பண்பாடு நோக்கப்படாது நாளடைவில் அகத்திலும் புறத்திலும் மாறுபாடடையின், மக்களின் போலிக் கோட்பாடுகளின வழி பண்புக் குறைவுகளும் செயலழிவுகளும் பரவ, பழித்தலும ஒறுத்தலும், வருத்தலும் காலப் போக்கில் புல்லுருவிகளாகத் தோன்றுவதியல்பே. இதனாலாம் பயன் உலகம் போர்களுக்குப் பிறப்பிடமாகி, சீர் கெட்டு உலகத் துயிர்கள் அழியுமென்

பது புலன் கொளற் பாலது. கடந்த முதற் பெரும் போரி னாலும், கடந்த இரண்டாம் பெரும் உலகப் போரினாலும், வாழ்க்கைத் துறைகளும் பண்பாடும் பாழடைந்து, மக்க ளுள்ளத்தே தவறுணர்வுகளும், திரிபாகிய அரசியற் கோட் பாடுகளும் கலஞ்செய்வது போல் மலிந்து வேரூன்றின. ஆனிரை ஓம்பல் வழி கோனாட்சியின் செல்வ நிலை அறியப் பட்ட மெய்ம்மையாதலான், ஆனிரையினையே ஒரு எடுத்துக் காட்டாக வைத்துக்கொண்டு, குட திசையில் போர்களின் பிறப்பிடங்களிலிருந்து முளைத்த அரசியலமைப்பின் வகை களின் பான்மையும் வன்மையும் பொது மக்கள் நிலை மேலேற்றிக் காண்குவம். குடி செய்து வாழ்வான் பால் இரு பசுக்களிருப்பின், அவைகளி னொன்றைக் கைப்பற்றி அது இல்லாத மற்றொரு குடிமகனுக்குத் தரும் வகையினை வற் புறுத்தலைக் கொண்ட அரசியலமைப்பு (Socialism) எழுந்தது ஒருபுறம். குடியோம்புவான் பால் இரு பசுக்களிருப்பின், அவன் அவைகளை ஆட்சியாளர்களிடம் ஒப்படைத்து, ஆவின் பாலின் சிறிதளவை ஆட்சியாளரிடம் அமைதியின்மையால் நாடிப்பெறும் அரசியல் முறையும் (Communism) மற்றொரு மருங்கில் வலிவுற்றது. ஒரு குடி மகன் பால் இரு பசுக் களிருப்பின் அவனது பாதுகாப்பில் அவைகளை விடுத்து, கற்றாவின் பாலை யெல்லாம் அரசியலார் கைப்பற்றி, பின் பாலின் சிறு பகுதியை குடி மகனிடம் விற்கும் உரிமை வாய்ந்த ஆட்சிமுறை (Fascism) ஒருபுடை வன்மையுற்றது. குடி செயல் வகையறிவானிடம் இரு பசுக்கள் இருந்தால், உடை யவனை சுட்டு வீழ்த்தி அல்லது துன்புறுத்திப், பசுக்களைத் தன்பால் படைவலிமையால் தனதாக்கிக் கொள்ளும் அரசியல் கொள்கை (Nazism) ஒருபக்கல் கையாளப்பட்டுப் பரவியது. குடி செய்வலென்னு மொருவன் பால் இரு பசுக்களிருப்பின் அவைகளின் ஒன்றை அரசியலார் கைப்பற்றி அதனைத் தாமே விற்று உழவு மாடு முதலியவைகளைப் பெற்று, கால் நடைச் செல்வத்தைத்தமக்கே உரிமையாக்கிக் கொளும் ஆட்சி முறை (Capitalism) ஒரு பக்கம் அமைந்துள்ளது. இத்தகைய பல்வகை ஆட்சி முறைகள் நடைமுறையில் பழிப்பிற் குள்ளாகி மக்கள் பால் வெகுளி, வேற்றுமை. வறுமையையும், பசி, பிணி, பகைமையையும் தோற்றுவித்து, இறுதியில் உலகக் கேட் டிற்குக் கருவிகளா யமைந்தன. இதனுன் ஒரு சிறு மக்கட் குழுவினர் ஏனைய மக்களையும் அன்னாரது உடைமையையும் திறன் வலியால் தங்கலத்திற்குப் பயன் படுத்திக்கொண்டு,

அறிவு பேதுற்றுத், தாமொன்றிற்கும் பயன்படா தொழுகி, தாமும் அழிதலோடமையாது, நீர் வழிக்கோரை போன்றொழுகும் மக்களையும் துன்பச் சுழலில் உழன்று மடியச் செய்கினறனர். பண்டே பகுத்தறிவின் துணை கொண்டு பாங்குடன் நிலவிய முடியாட்சி, குடிதழீஇக் கோலோச்சும் இயல்பிலதாகி, தான் தோன்றியாட்சிகளாய் காலப் புயலுக் கேற்ப வகை வகையாக கவடுவிட்டு, உயிர்க்கேடும் பொருட் கேடும் விளைத்துத் தற்காலக் கொந்தளிப்பில் சிக்கித்தட்டழிப் புப்பட்டுழலும் நிலை யெய்தியது. இந் நிலை மக்களைத் தீ நெறியில் புகுத்தி உரிமைப் பண்பிற்கு ஊறு செய்து செல்வ வாழ்வின் சிறப்பினையும் சீரினையும் குலைத்து விடுகின்றது.

உடலைப் பேணாத உயிரில்லை. உயிரைப் பேணாத உடலு மில்லை. வையக முழுவதும் உயிரீட்டங்கள் உடலோ டொன்றி மன்னுமாறு உழைக்கும் உரவோன், வேந்தமைவும் நாடு புரக் கும் நடு நிலைமையு முடைய தலைமையாளனுவான். செவ்விதாய் முறைமை செய்யும் இத்தகைய தலைமையாளனுயிர்த்தே மலர் தலை யுலகமாயினும், அவன் உயிரெல்லாம் உறைவதோர் உடலுமாயிலங்க வேண்டும். இத்தகைய முடியரசில் பொருந் தித் திகழும் குடியரசின் தனிச் சிறப்பில், மக்கள் உரிமை வாழ் வில் உறைபும் பெற்றி முற்றியவராவர். குடிமக்களாகிய உயிர் இயக்கும் துறைகளிலெல்லாம் குடியரசியலாகிய உடல் இயங்க வேண்டிய நியதியினைத்தமிழ் மக்கள் ஆதிக்கண்ணே அறிந் துள்ளாரென்பது செவி வழங்காக இக்காலத்து மக்களுக்குத் தோன்றிடினும் உரிமை வாழ்வுத் துறைகளும், தனி யூராட்சி முறைகளும் முடியரசொற்றுமையினை யொட்டியுள்ள வகை களும் தமிழ் நாட்டவர்க்குத்தொன்றுதொட்டு உரியவென்னும் பல சான்றுகள் கொண்டு தமிழ் நாட்டின் வரலாறு காண வல்லுநர் நிறுவியுள்ளாரென்பது அறியப்படும்.

விரோதி யாண்டு தைத்திங்கள் பதின்மூன்றும் நாள் முதல் இந்தியக் குடியரசு அமைப்பின் மூலம், தமிழ் நாட்ட வர், வரலாற்றுப் போக்கில் மறைந்த உரிமை வாழ்வினை மீளப் பெற்றாரெனினும், இந்திய அரசியலமைப்பின் வழி, கால முறைக்கேற்ப, நலம் பயக்கும் புதிய இயல்புகளினும், திட்டங் களினும் மக்கள் பழக்கப்பட வேண்டுவது பெரிதும் இன்றி யமையாதது. மற்றும் குடியரசியல் திட்டத்தை இந்நாடு முழுவதூஉம் நாமே நமக்கு வழங்கிக் கொள்வதினுன், அரசிய

லமைப்பின் நுட்பத்தை நன்குணர்ந்து அரசியல் வாழ்வில் பொறுப்புடையராய் பொது நன்மைகளில் ஒற்றுமையாக விருந்து அரசியலைப்பேணி, நமது நாட்டை மக்கட்டலைமை நாடாக முன்னேற்றமடையச் செய்வது நமது நோக்கமும் கடமையுமாகும்.

அயல் நாட்டாரின் ஆதிக்கத்தில் நம் நாடு உரிமை யிழந்து அடிமையுற்று வருந்திய நிலைமையினை உடனிருந்து கண்ட நாம் உரிமை வாழ்வு பெறும் விழைவில் குருதி சிந்தாது உரிமைப் போருடற்றி வெற்றிபெற்ற பேறு, எந்த நாட்டினரும் அடையாத செல்வச்சிறப்புடையது. அரசில்லா அரசு பொதுவுடைமை போன்ற அரசியல் கொள்கைகளின் அமளி அடங்கியபாடில்லாத சூழ்நிலையில், நமக்கேற்ற குடியரசியலின் திட்டத்தை நமது நாட்டு மக்களின் உறுப்பினராகத் தேர்தற்குரிய தக்காரைக் கொண்டு உருவாக்கி நாமே உயிர்ப்புடன் இயங்கத் தொடங்கியது நமது செயன் முயற்சியினையும் மாட்சிமையினையும் புலப்படுத்தும். இதனை நன்குணர்ந்து நாட்டுமக்கள் குடியாட்சியின் உரிமையினை யோர்ந்து, நாட்டினது நலந்தீங்குகளுக்குத்தாமே பொறுப்புடையாரென்று கருதி நல் வாழ்வு அளிக்கும் பண்புகளிலும் உரிமையுடன் வாழ்வாங்கு வாழ வழ்புறுத்தும் பணிகளிலும் ஈடுபட வேண்டும். இத்தனைகய பணிகளை நிறைவேற்றுதற்குரிய பொருட்பெருக்கினைகொடிய மிடி நிலையிலிருக்கும் நாம் தற்போது அடையாது போனாலும், சிந்தையின் நிறைவாகிய செல்வத்தை நாடி 'நல்லம் யாம்' என்ற நடுவு நிலையில் மெய்யன்பு கொண்டு, உள்ளல், உரைத்தல், உஞற்றல் ஆகிய மூன்றிலும் ஒன்றுபட்டுச் செய்யும் விழுமிய பழக்க முறைமை நமக்கு இன்றிமையாததாயிற்று. ஆதலின் இந்தியக் குடியரசியல் திட்டத்தைத் திகழச்செய்தல மக்களனைவருக்கும் உரிய முதற்பெருங் கடைமையாமென்க.

குடியாட்சியில் நிலவும் உரிமை வாழ்வு நாட்டுப்பற்றின் இன்றிமையா இயல்பினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நாட்டன்பின் இயல்பினை மிகுதிப்படுத்தக் குடியாட்சிப் பொறுப்பை அத்திட்டம் குடிமக்கள்பால் ஒப்படைத்திருப்பதினன், குடிகளாவார் பெரும்பான்மையார் கல்லாதவராயிருக்கும் நிலையில், கல்லாதாரை, கற்றவர்வழி ஒழுக வைக்கும் கடமை இயல்பிற்கும், அரசியலின் செவ்விய நிலைக்கும், கற்

றறிவுடைய சான்றோர், மாபெரும் பொறுப்புடையராகின்றார். கல்லாதாரையும் பொறுப்புடைய மக்களாகத் திகழ வைப்பது கற்றவரது கடமையுமாகும். இல்லையேல் பொறுப்பில்லாத கல்லாமாக்களின் அரசியலைப் பற்றிய வெற்றுரைகள் நாடெங்கும் பரவும். அவ்வாறு பொறுப்புணர்ச்சியில்லா மாக்கள் பரவவிடுதலினால் நாடாளும் மக்களுக்குப் பழியினை விளைவிப்பதாகும். இஃதோடமை யாது பகைவர் பலர் செய்த லரிதாகிய இன்னல்களைத் தாமே நாடாள்பவருக்கு ஆக்கித்தந்து இடர்ப்படுத்துவர். எனவே சான்றாண்மை நடாத்துதல் குடியரசு வாழ்வியல் துறைகளில் முதன்மையான தென்பது அறியப்பட்டது காண்க.

நாடும் குடியும் ஏற்றமுற, குன்றாத விளையுளைச் செய்வோரால் எல்லா உணவுகளும் நிறையவுளவாதல் இன்றிமையாதது. ஊட்டந்தரும் உய்வுறைகள் நிரம்பிய உணவுப் பொருள்கள் உயிர் வாழ்க்கையை வளனும் நலனுமுடையதாக்கி விளக்கஞ் செய்வன. உணவுப் பொருள்களில்லையேல், வாழ்நாள் குறைந்து ஊனுடல் வலிவற்று மக்களுயிர்க்குப் பெருங் கேடுண்டாகும். நந்நாட்டு மக்களிற் பலர் பாழ்த்த பசிப்பிணியால் வெற்றுயிர் வாழ்க்கையும் வாழ வழியிலராயும் உய்வுறை நலன்களின்றி இரங்கத்தக்க மிடிநிலையில் உழன்றிருப்பதினான், அதனை நீக்குவதில் கருத்தைச் செலுத்தாதும் உணவு முட்டுப்பாட்டையும் சிறிதும் உணராதும், மக்கள் வாளாவிருப்பின், குடியரசியலின் அமைப்புத் திட்டத்தின் அருமை நலனும் பெருமை இயல்பும் வறியவாகும்.

குடியரசியலில் வாழ்வார்க்கு வறுமையின்மை யுண்டாகாவாறு குறைகளைந்து புரக்க நாட்டு வேளாண் குடிகள், நீர் கொண்டு நன்புலம் வளம்படுமாறு செய்தல் வேண்டும். இதனான் உழவு செழிக்கும்: உழவு செழிக்க, உயிரின் உரு, வளர்ச்சி யடையும். மக்களுயிரும் உணவுப் பொருள்களின் உய்வுறை நலனால் எழுச்சிமீக்கூரும். ஆற்றல், வீறு, வளம் முதலாய நலன்களை மக்களுயிர்கள் பெற்று குடியரசியலில் அருஞ்செயல் பல ஆற்றி நிலவி வாழ்வதற்கேற்ப வாய்ப்புமுளது. மற்றும் விளையுளின் பயனில், நந்நாட்டுத் தலைமையாளரின் பொருபடைதருஉங் கொற்றமும் தங்கும். இத்தகைய கொற்றம் உழவுஞ் செழித்தற்கு வகையும் செய்யும். எனவே ஏரின் முயற்சி பகைவர் வலிமையினைத் தொலைத்து

நாட்டின் செழுமை நலனில் வலிமையை விளைவிக்கும். நம் நாடு பண்டு உழவர் உழாஅத இயற்கை விளை நலனும் பல வாய்ந்து ஊக்கந்தரும் வாழ்க்கை வளர்ச்சிக்கும் நுண்கலை வளர்ச்சிக்கும் நலன் பயவா நின்றதென்பது பழைய இலக்கியங்கள் பகருவதினன், எக்காரணங்கொண்டு அவைகள் தற்போது இலவாயின வென்பதூஉம், எவ்வழிகளான் அச்சிறப்புக்களை மீண்டும் எய்தலாமென்பதூஉம் ஆய்தற்குரியவை.

புன் புலங்களையும், பள்ளப் புலங்களையும் நன் புலங்களாக வளம் படுத்து முகத்தானென்றில் மட்டும் உணவுப் பெருக்கம் உளதாகாது. உணவுப் பொருள்கள் உளவாதற்கும், பெருக்கத்திற்கும், நீர் இன்றியமையாததாயினும், இயற்கை மழை நீர் ஒன்றினையே உற்ற துணையெனக் கருதுதல் நாடாள்பவருக்கும் வாழ்பவருக்கும் சிறுமையினை விளைவிக்கும். வானமும் தன்னிலையினின்றும் மாறுதலுங்கூடும். அதனன் ஏரி, குளம், முதலியவைகளைப் போன்ற நீர் நிலைகளைப் பெருக்கின், அதனல் நன் புலங்களின் செழுமை பெருகிப் பெரு நலங்கள விளையும். மற்றும் புன்புலங்களில் அமையும் மாஞ்செறிந்த காடுகள் வெப்பதட்ப முகமாக ஓரளவில் உணவுப் பெருக்கம் குறைவின்றி அமைதற்கும் இணையற்றது. உணவு வகைகள் உழவோம்பற்றொழில் மூலமும் நிலமகளுக்கு நில மகன் பணியாற்றும் வகையிலும் இனிது கிடைத்துவிடுமென்றாலும், ஆவோம்பல் என்ற துணைத் தொழில் வழி அவ்விளையுளின் மிகுதி பெரும்பாலும் துணியப்படும். உணவு வகைப் பொருள்கள் பல, இரு பெருந்தொழில்களால் பொலிவுற, பொன் பெரிது சிறக்கும் வகை தெற்றென விளங்காநிற்கும். விளைக்கப்பட்ட விளைபொருள்களை அயல் நாடுகளுக்கும் காலினும் கலத்தினுஞ் சென்று வாணிகஞ்செய்து பொருள் பெருக்கும் தாழ்விலாச் செல்வரான் பொருள் வாய்த்தல் நாட்டில் உண்டாக ஏதுவாகும். ஆகவே விளைபொருள்கள் உண்டாக்குதலானும், வாணிபஞ் செய்வதினுலும் குடியரசிற்குரிய வாழ்வியற்றுறை எளிதே புலனயிற்று. உண்மையான் ஆயுங்காலை, ஊறற்ற நீண்ட பெருவாழ்வினைக் குடியாட்சியில் பெறற்கு, வாழ்க்கைத் துறைகளில் பயன் மிகக் கண்ட சான்றோரது அறிவாட்சியும், பைங்கூழ் வளனறிந்தாரது உழவாட்சியும், வணிகர்தம் பெரும் பொருளாட்சியும் இன்றியமையாது நடைபெறல் வேண்டுமென்பது நன்கு உணரப்படுகின்றது. ஆகவே மக்களது செல்வநிலை அம்மக்களது

நாட்டை வலிமையுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் தோன்றச் செய்யும்.

குடியாட்சி முறையில் நாட்டின் நலங்கருதும் பொறுப்புடையார், உரிமை வாழ்விற்குச் சிறந்த உறுப்புக்களின் உண்மையான தன்மையினை, மக்கள் பால் காணும கருத்தும், செவ்விய மன நிலையும் உடையராதல் வேண்டும். பறிக்கவும் குறைக்கவும் முடியாத உரிமைகளைப்பற்றி பல நிபந்தனைகள் இந்திய அரசியல் திட்டத்தில் நுவலப்பட்டிருக்கின்றன. அவைகளை நடைமுறையில் எளிதாக செயற்படுத்தும் வினை மூலம் எவ்வித அச்சமும் தடையுமின்றி உரிமைப்பயனை எல்லா மக்களும் நுகர்தற்கு வாய்ப்புண்டு. குடியரசியலில் மக்கள் தங்கள் விருப்பங்களையும் கருத்துக்களையும் வெளியிட்டுரைக்கவும், அவ்வாறு செய்தற்குச் சட்டத்தொடர்புடைய வழித்துறைகளும் ஏற்பாடுகளும் இருக்கின்றன. அரசியலாட்சியாரிடம் காணப்படும் குற்றங்குறைகளைக் கண்டித்து வெளிப்படையாக மக்கள் எடுத்துக்கூறி, தாங்கள் விரும்பாத அரசியலார்களை அவர் தம் நிலையினின்று நீக்கவும் உரிமையுளது. ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் குழுவினருடனும் சாராதும் சிறிதும் தயங்காதும் பல்வகை அச்சமின்மையானும் நீதி மன்றங்கள் நியாயம் வழங்கவேண்டுமென்றும், நியாயம் வழங்குவோர் சமன் நோக்குக்கொண்டு ஆட்சிப் பொறுப்பாளரின் ஆணைவழி ஒழுகாத நேர்மைப் பண்புடன் உண்மை திகழ நீதியை உறுதிப் பாட்டுடன் வெளிப்படையான சட்டங்களின் துணை கொண்டு செல்வர்க்கும் எளியவர்கட்கும் அரசியலாட்சியாளர்கட்கும், அஃதில்லார்க்கும் ஒரே வகையாக வழங்குதற்கு நீதிமன்றங்களுக்கு உரிமையுண்டென்றும் அரசியல் திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளன. மற்றும் மறைமுகமாகவும் அல்லது நேர்முறையில் கலந்து உசாவுதலின்றியே காவலில் வைக்கப்படும் என்ற அச்சமின்றி உழைப்பவர் தம் முயற்சியில் விளையும் பயனையும் அறத்தாற்றில் ஈட்டிய பொருளையும் நுகர்தற்கு இயலும் உரிமைகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. நாட்டுமக்களிடையே ஒருவருக்கொருவர் ஒருமை யுறுவித்து ஒன்று பட்டு வாழும் வாழ்க்கை நிலையினை வற்புறுத்த, தீண்டாமை நடை முறையில் காணும் மனப் பண்பும் ஊன அறிவும் ஒழிக்கப்படும் முறையினையும், மக்களை உயரிய நிலைமைக்கு கொண்டுவரப்படும ஒப்புரவொழுக்குத் தன்மையும் ஆண்மையும் திகழுதற்கேற்ற உரிமைகளும்

வழங்கப்பட்டுள்ளன. மனக்கருத்தையும் மனவியல்பையும் தழுவி கண்ணற எடுத்துரைக்கும் உரிமையும், எச்சமயத் தவர்க்கும் வழி படுக்திறத்தில் சம உரிமையும் முதலாய உரிமைப் பண்புகளைப் பறிக்கப்படாத வகைகளையும் அரசியல் திட்டத்தில் வற்புறுத்தப்பட்டமை உய்த்துணரப்படும். இவ்வாறு வழங்கப்பட்ட உரிமைகளை, காலப்போக்கின் கருத்தை மேற்கொண்டு, கையவைத்து வலிந்து பற்றும் ஆற்றல் சட்ட மன்றத்தார்க்கும் நிர்வாக நிலையத்தார்க்கும் உளதென அரசியல் திட்டத்திலிருப்பதால், இவ்வுரிமைகளின் உட்கோள் அணுவணுவாய்த் தேய்ந்து மறையாவண்ணம், அவ்வுரிமைகளைப் பேணுதற் பொருட்டு, நாட்டு மக்கட்குத் துணையாக, நன்கு அமைக்கப்பட்ட அரசியல் கட்சிகள் இன்றியமையாது வேண்டப்படும்.

மக்களின் உயர்வைப் பொறுத்து நாட்டின் உயர்வு தெளியப்படும். உரிமை வாழ்வினையும் பொறுப்பினையும் நாட்டு மக்களுக்கு அரசியல் திட்டம் வழங்கியிருப்பதால், அவ்வரசியலின் பயனை நன்முயற்சி கொண்டு அடையும் வழியும், வாய்ப்பு முறையும் மாசு தீர்த்துக் கோலி குடியரசியலின் மாட்சிமை மேம்பட, மக்கள் உறுதியும் ஊக்கமும் விழிப்புமுடையராயும் விளங்கவேண்டும். அரசியல் சட்ட மன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்தற்குரியாரை தேர்ந்தெடுக்கும் உரிமை மூவேழு ஆண்டு நிரம்பிய நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்குமுளதாதலின், நாட்டு நிர்வாகமும், அரசியல் வாழ்க்கை நடைமுறையில் உறைப்பும் அம்மக்களது பொறுப்பிலே அமைந்துள்ளன.

இந்திய அரசியலமைப்பின்படி, தனித் தொகுதி மறைந்தொழிந்ததினுன், நாட்டு மக்களெல்லோரும் தம் தம் உரிமையைப் பெறுவதோடு மற்றைய பிரிவினரது கடமை உணர்வினையும் உரிமையினையும் மறக்கலாகாது. அவ்வாறு மறப்பின் பரந்ததீங்கு நாட்டில் விளைவது இன்றியமையாததாயிற்று. மக்கட்குழு வாழ்க்கையினழகு, உவக்கப்பட்ட கடமையுணர்வு, வாக்கு நேர்மை, பொறுப்புணர்ச்சி, மனவுறுதி, சகிப்புத் தன்மை, தளரா ஊக்கம் முதலியவற்றின் பாலமையும். அகமும் புறமும் ஒன்றித்து நிற்றலும், சொற் செயல் ஒற்றுமையடைதலும் உரிமை வாழ்வின் இரு ஊற்றுக்கண்கள். இவைகள் வழி வாழ்க்கையின், சிறப்பும் நடையொழுக்க அமைப்பும்

அமையப் பெறுதலான், வாழ்க்கையில் தனி மக்களையும் பிரிவினர்களையும் கட்டுப்பட்டு நடக்குமாறு விதிக்கும் ஆற்றலுடையது, நாட்டு மக்களின் கருத் தொற்றுமையே. இக்கருத் தொற்றுமையின் வழி, செயலாற்றத்தக்கதோர் அரசியலமைப்பு விளைவதினால், நாட்டு மக்களின் ஒற்றுமை நாட்டத்தை தழுவும் அரசியலை அமைப்பது குடியரசின் முறைமையாகும். மேலை நாட்டுக் குடியாட்சி, நாட்டு மக்களின் பெருவாரியான நாட்டத்தை ஆட்சிக் குழுவினர் தலையற்று நிறைவேற்றும் துறையிலே படிந்துள்ளதென்பது ஈண்டு அறியற்பாற்று.

நாட்டு மக்களின் ஒற்றுமை நலத்தின் நாட்டத்தை அமைக்கும் அரசியல் பொறுப்பினிற்காக நன் மக்களைத் தேர்ந்தெடுக்குங்காலை, உரிமைப் பண்பினை பயனபெறுமாறு நிலை நாட்ட வேண்டுவது மக்களுக்குற்ற கடமையாகும். மக்களால் தேர்ந்தெடுத்தற்குரியார் பரந்த உள்ளமும் கூர்த்த அறிவும் தொண்டில் உறைப்பும், அடக்கமும், தளரா வுறுதியும், நல்லியல்புகளில் நோக்கமும், பிறப்பால் கற்பிக்கப் பெற்ற பிரிவியற் கொள்கைச் சுழியிற்படா மனத்திண்மையும் உணர்வாற்றலுடன் அமையப் பெற்றவராதல் வேண்டும். ஒவ்வொரு மக்களுக்கும் இருபத்தொன்று ஆண்டு வந்தபின்னர் அரசியல் வாழ்க்கை தொடங்குவதினால் அறியாமை காரணமாக அரசியல் பொறுப்பினிற்கு மக்களைத் தேர்ந்தெடுப்பது நாட்டிற்கு பெருங்கேடு விளையும் என்பதை யாவரும் கருத்திருத்திக் கொளற்பாலது. உடைமையின் நிர்வாகத்தை பிறிதொருவரிடத்து ஒப்படைக்குங்காலை பக்கள் எவ்வாறு விழிப்புடையராயிருக்கவேண்டுமோ, அவ்வாறு உயிரினும் ஓம்பப்படும் உரிமைகளைப் பயன்படும் வகையில் நாட்டு மக்களும கண்ணுங் கருத்துமாயிருத்தல் சாலவும் நன்று. அரசியல் உரிமையினை ஒருவர் பால் ஒப்படைக்குங்கால், உரிமைகளுக் குரியவர் நாமெனறும், நாம் வகுத்த முறைகளின வரய் வழி அவர் ஒழுகவேண்டுமென்றும், அவரது ஒழுகாறுசெல் பொறுப்புணர்வுக்குக் கட்டுப்பட்டு நாம வகுத்த வரம்பினது எல்லையுடபட்டிருக்கவேண்டுமென்றும, நமது உரிமைகளைப் பயனபடும படி வழங்குங்காலை, அவர் சுய நல நாட்டமின்றி நமது நாட்டத்தின் நலனைக் கருதி வினையாற்றவேண்டுமென்றும நியதியினை நிலை நிறுத்தல் வேண்டும. இம் முறையில் முளைத்த அரசியலமைப்பு, உரிமையின் உயிர் நாடியாகும்.

நாட்டு மக்களெல்லோரும் நாட்டில் நேர்மையும் அமைதியும் நிலைபெற, நாட்டு அரசியல் அலுவல்கள் யாவையெனக் கருதிப் பேணுவதில் கண்ணுங் கருத்துமாயிருக்கும் கடமையுள்ளவராயிருக்க வேண்டும். நாட்டின் நலனுக்காக, மக்கள் உள் அமைதியினைக் குலைத்து அதனுன் பயன்பெற எண்ணும் பல்வகைக் கொள்கைகளையுடைய பல்குழுவும், பாழ்செய்யும் உட்பகைகளையும் அறவே ஒழிக்க முற்படவேண்டும். தனிப்பட்ட ஆற்றலைக் கொண்டும் அரசியல் வலிமையைக்கொண்டும் நாட்டின் பாதுகாப்பிற்கும் நல்லாட்சிக்கும் பாடுபட வேண்டியது ஒவ்வொரு மக்களுக்கு முற்ற கடமையாம். இக்கடமையுணர்வைப் பயன் படுத்திக் கொள்ளவும், மக்கள் குடியரசியலுக்கு வலிமை கொடுக்கவும், தனிச் சங்கங்களை மக்கள் நிறுவும் உரிமை, இந்திய அரசிய லமைப்பில் காணப்படுகிறது.

நாட்டிற்கு அமைதியைக் குலைத்து கேடு விளைவிக்கும் வன்சனர்கள் தங்களுக்குள் ஒன்றுபடுங் காலையில், ஆட்சி முறை தவறி, பொருள்நிலை மாறுபடும். அவ்வாறு அத்தகையார் ஒன்று படும்பொழுது, அரசியலில் பொறுப்புடைய மனப்பான்மையார் ஒன்றுபட வில்லையேல், பொறுப்புடைய சான்றோர் ஒருவர் பின்னொருவராக வீழ்ச்சியடைவது திண்ணம். எனவே ஆட்சியில் பற்றும அறிவும் தெளிவுமுடைய சான்றோர் அரசியல் சங்கம் நிறுவி, அரசியல் பொறுப்புள்ள அலுவல்களில் ஈடுபட்டு, அரசியல் வலிமை, பெரும் பயன் கொள்ள உதவுவார். அரசியலறிவு பரப்புவது ஆட்சியின் பொறுப்பு. அரசியலைப் பற்றிய தேர்ந்த அறிவு நாட்டினது வலிமையாகும். இதனோடமையாது மக்களில் பெரும்பாலும் நூற்றுக்கு எழுபது விழுக்காடு உள்ளூர்களிலும் கிராமங்களிலும வாழ்ந்து வருவதலால், அவ்வவ் விடங்களில் அரசியலறிவு நாடும் அவை பல அமைத்து தனியூராட்சிக்குரிய நிறை அலுவல்களை உடனுக்குடன நன்கு கவனிக்கப் படல்வேண்டும். தொடர்ந்து இவ்வகையான தொழிலாற்றுவதில், அக அனுபவமும் புறவளர்வும் சம நிறையாகத் துணையாகவேண்டுமென்பது மெய்ம்மையாகும். இனறேல் ஒரு பக்கச்சார்பினல் அளவின்மையும் நிறையின்மையும் பெருக, நாடும், மக்களும் அல்லலுறலாகும்.

(தொடரும்.)

# நாடும் மொழியும்

கழகர். நா. நல்லொளியன்

நாடெனப்படுவது எவ்வாறு இருக்கவேண்டும் என்று கேட்பின் பலவளங்கள் நிறைந்தும் கல்வி யறிவு மிகுந்தும் சான்றோர்களை யுடையதாயும் வாணிக வளம்பெற்றதாயும் பலராலும் விரும்பப்படும் தன்மையா யிருத்தல் வேண்டும்.

தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.

என்று திருவள்ளுவர் கூறியுள்ளவாற்றால் நன்குணரலாம்.

நாட்டுமொழி நாட்டு மக்களால் நாடப்படும் மொழியாயன்றே இருத்தல்வேண்டும். அவ்வாறிருப்பின் கல்விப் பெருக்கம் நாட்டில் சிறந்து திகழும். கல்வி நிலையங்கள் ஆங்காங்குப்பேசப்படும் மொழியிலிருப்பின் எல்லா மக்களும் படித்துணர்ந்து கொள்ளல் எளிதாகும். அவ்வாறின்றி வேற்று மொழியாயின் பல துன்பங்கள் நேருதல் இயல்பு. இதனை இக்காலத்துப் பிறமொழி பயின்ற பலரும் நன்குணர்வர்.

உலகை உற்று நோக்கும் பொழுது எங்ஙனும் நாட்டின் பெயர்கள் மொழியின் பெயரா லேற்பட்டிருக்கின்றன. சீனமொழி பேசும் நாடு சீனம், உருசியம் பேசும் நாடு உருசியா, பிரஞ்சு பேசும் நாடு பிரான்சு, ஜெர்மானியம் பேசும் நாடு ஜெர்மன், சிங்களம் பேசும் நாடு சிலோன் இத்தாலி பேசும் நாடு இத்தாலி சிந்து மொழி பேசுமிடம் சிந்து, வங்காளம் பேசுமிடம் வங்காளம் அஸ்ஸாம் பேசுமிடம் அஸ்ஸாம், ஆந்திரம் பேசுமிடம் ஆந்திரம், ஓரியா பேசுமிடம் ஓரிசா, மலையாளம் பேசுமிடம் மலையாளம், கன்னடம் பேசுமிடம் கன்னடம், மராத்தி பேசுமிடம் மராத்தி, தமிழ் வழங்குமிடம் தமிழகம் எனப் பெயர் வழங்கி வருகின்றன இவற்றால் நாட்டின் பெயரும் மொழியின் பெயரும் ஒன்றா யிருக்கின்றன.

இந்நிலையில் நம் நாட்டை இந்தியத் துணைக் கண்டத்தைத உற்று நோக்குவாம். இந்நாட்டினை 'இந்தியா' என்று அழைத்து வந்தனர் இது சில நூற்றாண்டுகளாகப் பிற நாட்டார் அழைத்த பெயராகும். ஆனால், விடுதலை பெற்ற நாட்டின் அரசியலமைப்பார் 1949ல் இந்நாட்டிற்கு "பாரத் பூமி" என்ற பெயர் சூட்டி யுள்ளனர். எவ்வியல்பு நோக்கி இப்பெய ரிட்டனரோ அறியோம். வரலாற்று முறைப்படியும் இப்பாரத் பூமி ஒரு நாடாய் ஓராட்சியில் இருந்ததில்லை. சுமார் நூற்றிருபது ஆண்டுகளாக ஆங்கிலேயரால் ஒருவாறு ஒரு ஆட்சியின் கீழிருந்ததேனும் வேறு நாட்டவர் ஆட்சி சில பகுதிகளில் இன்றும் உள்ளன. ஆகவே இதனை ஒரு நாடாகக் கருதிப் பெயரிடுதலும் அறிவுடைமையாகாமை காண்க. இந்நிலையில் இதனை இந்திய நாடென்றே நாளிதழ்கள் வெளியிட்டு வருகின்றன. பிற நாடுகளில் சில 'பாரத்' என்றே அழைக்கின்றன.

உலகில் நாட்டின் பெயருக்கேற்ப மொழியும் சிறந்ததாக இருக்கின்றமை வரலாறுகண்ட உண்மையாகும். இந்தியத் துணைக்கண்டத்திற்கு பாரத் பூமி' என்ற புதுப் பெயருக் கேற்ப 'பாரத்' என்று ஒரு மொழி யிருக்க வேண்டும். இந்நாட்டில் அவ்வாறில்லை. ஆனால், சில உண்மைகளை வெளியிட அறிஞர்கள் சில கதைகளைப் புனைப் பெயரிட்டுக் கூறுதல் இன்றும் காண்ப தொன்றேயாம். அதில் கூறப்பட்ட பெயரை ஒரு நாட்டின் பெயராகத் தேர்ந்து அமைத்தல் அத்துணைச் சிறப்பின்றுதலை அறிக.

நாட்டின் பொதுமொழி 'பாரத்' என அமைக்காது இந்தி என்று இயம்பப்படுகிறது. அதுவே பல்கலைக்கழகம் முதல் (பாடமொழி) பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்று இராதாகிருட்டினனார் தலைவராயுள்ள பல்கலைக்கழக ஆய்வுக்குழு கூறியுளது. அதனை 'அகிலபாரத்' கல்வியமைச்சர் முதலாகிய கல்விக்குழுவினர் வலியுறுத்தி முடிவு செய்துள்ளனர். எவ்வளவு விரைவில் ஆங்கிலத்தை விலக்கி இந்தியால் பயிற்றுவிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் செய்க என்று வலியுறுத்தப் பட்டுள்ளது.

ஒருமொழி அந்நாட்டில் பலரால் நன்கு பேசவும் எழுதவும் பட்டு வழங்கி மக்கட்கு விளங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும் அம்மொழி பொதுமொழி யாதற் குரியது. ஆனால் இன்றுள்ள 32 கோடி மக்களில் சுமார் $1\frac{1}{2}$ கோடி மக்களால் பேசப்பட்டு வந்தது இந்தி மொழி யாகும். சில ஆண்டுகளாகத் தேசியக் கொள்கையைப் பின் பற்றிச்சிலர் சிறிது பேசியதை ஒருவாறு அறிந்து பதில் பேசக்கூடிய மக்கள் சுமார் $3\frac{1}{2}$ கோடியாகும். ஆனால் பேசி யதனை ஒருவாறு புரிந்துகொள்ளும் நிலையிலுள்ளவர் சுமார் 4 கோடி எனலாம். கற்றுத்தேர்ந்து மேடைப்பேச்சு வல் லார் சுமார் 20000 எனலாம் ஆகவே, இன்றைய அள வில் இந்தி தெரிந்தவர் என அரசியலாரால் கணக்கிடப் பட்டுள்ளது சுமார் 10 கோடி. இப்படிப்பட்ட நிலையில் தான் சென்ற ஆண்டு இந்தி அரசியல் மொழி என்று முடிவு செய்துள்ளனர்.

இதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் (1) மேற் கண்டவாறுள்ள பெரும்பாலோர் பேசும் மொழி. (2) இந் திய நாடு என்றிருத்தலால் அதற்கேற்ற இந்திமொழியே அரசியல் மொழியாக வேண்டும். (3) இந்தி வடமொழியின் கிளைமொழியாய்ப் பல மொழிச்சொற்களையும் கொண்டு திகழ்வது (4) இந்தி மொழியாளர் வற்புறுத்தல் இது மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் கூறப்படுகிறது. இவற்றையும் ஆராய்வாம்.

இன்று இங்கு வழங்கிவரும் சிறந்த மொழிகள் பதி னேழாம். இந்நாட்டை பதினேழு மண்டலங்களாகப் பிரிக்க முன்னமே முடிவு செய்யப்பட்டுள்ளது. அவர்க ளுள் சுமார் 10 கோடி மக்கள் இந்திபேசுவோர் இவர்கள் பற்றிய விளக்கம் முன்னர்க் கூறினும். அதன்படி இந்தியே தாய்மொழியாகக் கொண்டவர் சுமார் இரண்டுகோடிக் குட்பட்டதுதான். இதனை மறைத்துக் கூறினும் உண்மை புலனாகாமற் போகாதன்றோ?

இந்தியா என்பதே பிறர் இட்டபெயர். அது இழி பென்று விலக்கிய அறிஞர்கள் இந்தியைப் பொதுமொழி யாக்குவதின் இழிபையும் உணராதது வியப்பே இந்தி அரசியல் மொழியாக இருக்கவேண்டுமாயின், இந்தியா

என்று நாட்டின் பெயர் இருத்தலே சிறப்பு. 'இந்தியா'வை அகற்றிவிட்டு இந்தியை மட்டும் போற்றி ஏனைய மக்கள் மேல் திணிப்பது முறையன்று. ஓர் ஜர்மன் அரசியல் தத்துவ அறிஞர் "ஒரு நாட்டைக் கைப்பற்றியவுடன் தம் மொழியைத்திணித்து பழைய நாகரீகத்தை அழித்து ஒழித்து வேறுபடுத்தினால் அந்நாடு என்றும் மீளா அடிமையில் நிலைத்திருக்கும்" என்பது படக்கூறியுள்ளார். அதனை மேற்கொள்ளும் முறையில் இன்றைய அரசியலாரின் மொழித்திணிப்பு முறை அமைந்திருக்கின்றது. இதனால் புது நாகரீகந் தோன்றுமேனும் அது வருணாச்சிரம முறைமை பற்றிய இழிபினை நாட்டிற்கு நல்குவதன்றி வள்ளுவர் வழிமுறையைப் பின்புற்றுவதாயமையாது. ஆகவே நாட்டை நலந்திகழ வைக்காத ஒருமொழி அரசியல் மொழியாகிப் பயனென்?

ஒருமொழி தனக்கென மிக்க சொல் வளமும் பொருள் வளமும் மிக்கதா யிருத்தல் வேண்டும். இந்தி அரசியல் மொழியாதற்குரிய தனிச்சிறப்புக்கள் ஏதும் பெற்றிலது. இதனை அரசியற் றலைவர்களையன்றி அம்மொழியாளர்களும் ஒப்புக் கொள்கின்றனர். சட்டங்கள் செய்வதற்கூச் செம்மைப்பட்ட மொழியே வேண்டும். நுணுக்கங்களை விளக்க வல்ல சொற்களிருத்தல் வேண்டும். அவைகளைப் பிறமொழியிலிருந்து முற்றிலும் கடன் வாங்கினால் அவ்வம் மொழியாளர்கள் அதன் நுணுக்கங்களை நன்குணர்வாரே யன்றி ஏனையோர் இடர்ப்படுவர். இலக்கணவரையறை எம்மொழியி லில்லையோ அம்மொழி பற்பல பெரும் விகற்பங்களைப் பெற்று இடத்திற்கிடம் வேறுபடும். ஆதலால் அம்மொழி கற்றவர் கூட, தம் மண்டலத்தினின்றும் வேறு மண்டலஞ் செல்லின் அல்லலுறுதலைக் கண்கூடாகக் காண்கிறோம். சென்னை இந்திக்கும் பீகார் இந்திக்கும், பம்பாய் இந்திக்கும் கல்கத்தா இந்திக்கும், டில்லி இந்திக்கும் நாகபூர் இந்திக்கும் சில வேறுபாடுகள் நின்று திகழ்கின்றன. ஒரு பகுதியினர் பேசும் முறையைப் பிறிதொரு சாரார் புரிந்து கொள்ளுதல் கடினமாக இருக்கிறது. இதனை இந்தி யுணர்ந்து வடநாடு சுற்றியவர்கள் நன்குணர்வர்.

ஆங்கில மொழி தனக்கென எழுத்துக்களையும் சொற்களையும் உடையது. ஆனால், பிறமொழிச் சொற்களையும்

கொண்டு திகழ்கின்றது. அது போலவே இந்தியும் தனக்கென எழுத்துக்களைக் கொண்டுள்ளது. இதனை வடநாட்டின் பொது மக்கள் பலர் வெறுக்கின்றனர். சிலர் இந்துஸ்தானி பொது மொழியாக வேண்டும் என்று கூறுகின்றனர். உருதுஎழுத்தில் எழுதப்படல் வேண்டும் என்றனர். ஆனால், அவர் கூற்றுக்கள் காற்றில் தூற்றிவிடப்பட்டன. ஆகவே, இவைகளை உற்று நோக்கில் இந்தி உணர்ந்து தாய் மொழியாகக் கொண்டோருள் பலர் தேவநாகரியிலிருக்கும் இந்தியை விரும்பவில்லை என்பது பெறப்படும். ஆதலால், அரசியலார் செய்த முடிவு சில இந்தி மொழியாளர் வற்புறுத்தல் பேரிலும் ஆட்சியிலிருக்கும் கட்சிச செல்வாக்கிலிருக்கும் சிலரின் மிகுதிபற்றியும் என்பது தெள்ளிது. இதனால் நாட்டின் பொதுமக்கள் அனைவரும் அதனை விரும்பி யேற்கின்றனர் என்பது பெறப்படாது.

இந்திய நாடு ஒரு நாடன்று, பல மொழி பேசும் பல இன மக்களையுடையது. ஆகையால், இதனை ஓர் துணைக் கண்டம் என்று கூறுவதை யாவரும் ஒப்புக்கொள்கின்றனர். பல நாடுகளை ஒன்று சேர்ந்த ஒரு கண்டத்தை ஒரு மொழியால் ஆளுதல் இயலாத தொன்றும். ஆசியா, ஐரோப்பா என்ற இருகண்டங்களும் தொடர்ந்த நிலப் பரப்பாயினும் பல நாடுகளாகப் பிரிந்து பலவேறு மொழியாளர்களால் ஆளப்பட்டு வருகின்றன. இவ்வியல்பை உற்றுநோக்கின் ஒரு மொழியால் ஒரு கண்டத்தை ஆள முடியாமை பெறப்படும். அது போலத்தான் இத் துணைக் கண்ட நிலையும் எனலாம்.

ஒரு கண்டத்தை ஒரு மொழியால் ஆளவேண்டு மேல் அதற்குரிய மொழி உலகப் பொதுமொழியாகல் வேண்டும். அதற்கேற்ற மொழி ஆங்கிலமன்றி வேறு மொழியில்லை. உலகமொழி பலவகை விஞ்ஞானம், கலைவளம், கணக்கு, இலக்கியம் முதலியவற்றில் சிறப்புற்று எல்லா நாடுகளிலும் பயிலப்பட்டு வழங்கி வருதல்வேண்டும். அம்மொழி மற்றெந்த நாட்டவராலும் கலைவிஞ்ஞானம் முதலியவற்றை மொழி பெயர்த்துக் கொளக்கொடுத்து சிறக்கச் செய்யும் பெற்றி யுற்றிருக்க வேண்டும். இந்நிலைகளில் ஒன்றுகூட இல்லாத இந்திமொழி ஒரு கண்டமொழி யாதற்குரியதன்று. அதனை இத்துணைக் கண்ட மொழியாக்கியது பொருந்தாது. ஆகவே இதனைக் கொண்டு பல்கலைக் கழகங்

களிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் எவ்வாறு மாணவர்கட்கு விஞ்ஞானம் முதலிய அறிவியல்களைப் பயிற்றுவிப்பது ? இதனை நன்கு சிந்தியாது ஆட்சிக்குழுவினரும் கல்விக் குழுவினரும் செய்த முடிவுகள் முடிதற்கருமையை நன்கு வெளிக் காட்டுகின்றன.

மக்கள் ஆங்காங்குள்ள மொழியில் ஆட்சி நடத்துவதையே விரும்புகின்றனர். ஆனால், அறிவியலில் சிறந்த மொழி இன்றிருப்பதுபோல் என்றும் இருக்கட்டும் அதன் சிறப்பினாலும் கற்றுள்ளவர் உண்மையாலும் என்கின்றனர் மக்கள். ஆங்கிலத்தை உடனடியாக அகற்றுமிடங்களில் அவ்வம்மண்டல மொழிகளே திகழ வேண்டும். வேற்று மொழி வேண்டாம் என்றியம்பாத மண்டலங்களில்லை. ஆகவே ஆங்கிலத்தை விலக்கிவிட்டு அவ்விடத்தில் இந்தியை நுழைப்பதை மண்டல மக்களில் பெரும்பகுதியினர் வெறுக்கின்றனர். இது இயல்புதானே. சுமார் ஐம்பது அறுபது ஆண்டுகளின் அரசியல் பதவி, அரசியல் அலுவலிலுள்ளவர் பட்டியலைப் பார்த்த எவர்தாம் இவ்வாறு எண்ணுமல் இருக்க முடியும்? ஆகையால் மண்டல மொழியில் ஆட்சி நடப்பதை மக்கள் விரும்புவதில் வியப்பில்லை.

பன்னெடுநாளாய் வளம்பெற்ற மொழியாய் கலை நிறைந்து காணப்படும் தமிழ்மொழி மண்டல அரசியற்கு ஏற்றதே எனினும் விஞ்ஞான வளமில்லாததுதான் இன்றுள்ள இந்தியமொழிகள் அனைத்திலும் சொல், பொருள், இலக்கணம் முதலிய வரையறையில் சிறந்தமொழி தமிழ்போல் வேறு இல்லை எனல் மிகையாகாது. இதனை மேலைநாட்டறிஞர் பலரும் வலியுறுத்திக் கூறியுள்ளனர். இத்தமிழ் மொழி சட்டங்களியற்றுதற்கு வேண்டிய நுணுக்க வினக்கத்திற்கு உகந்த சொல் வளம் மிக்கது. பன்னூறுண்டுகளாகப் பிறர் படையெடுப்பால் பல்வேறு மொழிகள் காலந்தோறும் புகுந்து இந்திய துணைக்கண்ட முழுதும் பரவியிருந்த தமிழ்மொழியை மெல்ல மெல்லத்தென்னுட்டு மொழியாகச் செய்துவிட்டது என்பதனை மொழி நூலுணர்ந்த சூரியநாராயண சாத்திரியார் முதற் பலரும் கூறுகின்றனர்.

# மாணிக்கவாசகரும் அறிவியலும்

(வேலூர்க் காசழகன்)

செந்தமிழ் மொழியைச் செழுமையுடன் செழிக்க வைத்த செந்தமிழ்ப் புலவர்களுள் தொல்காப்பியரும், வள்ளுவரும், மாணிக்கவாசகரும் தனிச் சிறப்பெய்தியவர்கள். அகத்திணையா லழகுற வைத்த தொல்காப்பியரும் இல்லறத்தா லின்புறவைத்த வள்ளுவரும், கோவையால் கனிவுற வைத்த மாணிக்கவாசகரும், முத்தமிழுக்கு முச்சுடர்கள் ....விளங்கிய அறிவின் முனைவனென்ற தொல்காப்பியரின் தூய அறத்தினின்று வழுவாமல்

---

இதுகாறும் கூறியவற்றால் இந்தியா ஒரு துணைக் கண்ட மென்பதும், அதற்கு இந்தி அரசியல் மொழியாகற்குரிய சிறப்பற்றதென்பதும், ஒரு துணைக் கண்டத்தை வரலாற்று முறைப்படி மொழிப்பெயரின்றி வேறு பெயரிட்டழைத்தல் தக்கதன்று என்பதும், பெயருக் கேற்ற மொழியின்மையும் ஒரு துணைக்கட்டத்தை ஒரு மொழி யாள வியாலாதென்பதும், இன்றுள்ள ஆங்கிலத்தை அகற்றக் கூடாதென்பதும், அது நீக்கப்படுமிடங்களில் மண்டலமொழிகளே இடம் பெறற்குரியன வென்பதும், சொல்வளமில்லாத நுணுக்கமற்ற மொழி பொது மொழி யாகற்பாற்றன்று என்பதும், வளமிக்க தமிழ் மண்டல மொழியென்பதும், அது பண்டு இந்தியமொழியாயிருந்துள்ளதென்பதும், பல்கலைக்கழகங்களில் இந்தி பாட மொழியாக அமைதல் கூடாதென்பதும் ஒருவாறு விளக்கப்பட்டுள்ளன.

விநாயகர் வழிபாடு தமிழகத்தில் நுழையாத காலத்தில், இன்பக் கலைகளை எதிர்த்த சமண-பௌத்தர்களுக்குப் பின்னுல், மாணிக்கவாசகர் முத்தமிழ் நாட்டில் பிறந்து இன்பக்கலை ஏந்தி இறைவனை யறியலா மென்றியம்பி, உருகிப்பெருகி உளங்குளிரவைக்கும் தேனினுமினிய திருவாசகத்தையளித்து முழுமுதற் பரம்பொருளாம் சிவக் கடவுளை 'முனைவனே' என்று வழிபட்டமை ஆராய்ச்சிக் குரியதன்றோ !

அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என்றும், வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படுமென்றும், எடுத்துரைத்த வள்ளுவரைப் போன்றே மண்ணுலகில் மங்கையுடன் வாழ்ந்தே இறைவனை யடையலா மென்றுரைத்து, உலகை உவகையுறும் மலர் வனமென உணர்த்தி, தலைவனுக்கும் தலைவிக்கும் அறப்பெருங் காதலால் உள்ளத்தில் கிளர்த்தெழுகின்ற காதலுணர்ச்சி நானூறென நவின்று அவ்வொவ் வொன்றிற்கும் பாட்டமைத்து அப்பாடல்களில் தலைவியைப் பிற தெய்வங்கள் வணங்குகின்ற சிவபரம் பொருளுக் கிணையாக்கி மங்கையர்க்கு மகுடமிடும் மணிமுடியாம் பெருஞ் சிறப்பைப் பீடுடனளித்த உவமையற்ற உயர்வு மாணிக்கவாசர் ஒருவருக்கே உண்டு.

இயற்கையிற் றோய்ந் திவ்வுலகை எழில்பெற வைக்கும் மலர் வனங்களையும் நீர் நிரம்பிய களங்களையும், மக்களையும் நன்குணர்ந்து, மக்களின் குறிக்கோள் இன்பமென்றும் அவ்வின்பம் ஆடவரிடத்தும் மகளிரிடத்தும் பிணைப்பால் பிறங்குகிறதென்றும், பிணைப்பால் பிறங்கிய இன்பமே பரம்பொருளையடைய வைக்குமென்றும்விளக்கி திண்மைக்கும் நுண்மைக்குமுள்ள தொடர்பை உணர்த்திய மணிவாசகரின் மதிநுட்பம் மதித்தற்கரிது.

ஆழ்ந்த சிந்தனையாலும், சிந்தனையில் தோய்ந்தமை யாலும், நற்பொருளை நன்குணர்ந்தமையாலும், மக்க ளுக்கும் இயற்கைக்கும் இலங்கும் தொடர்பை அறிந்து, உலகம் உவகையுறத் தம் பளிங்கொத்த உளத்தில் துள்ளிய தெள்ளிய கருத்துக்களை எழிலுடனும், தூய்மையுடனும், உயர்வுடனும் விளக்கி, உணர்ச்சியையூட்டி அறிவை ஒளிர வைத்து, ஆழச்சிந்திக்கவைத்து, வாழ்வைத் தூய்மையாக்க வைத்து, மன்பதையை மேல் நிலைக்கேக வைக்கும் மணி வாசகரின் உயர்வுடைமையை யுன்னுங்கால் உவகையுறாம லிருக்க வியலவில்லை.

தில்லையை முதற் பொருளாக்கி, ஐந்து நிலத்திற்குரிய மலர்களைக் கருப்பொருளாக்கி, அவண் திகழ்கின்ற திணை யியல்களைத் திணை மயக்கமென மொழிந்து உரிப்பொருளை ஒளிரவைத்து, ஐந்து மலர்களை மாலையாக்கி அதில் தக வுடைய தெய்வ இயலை யிலங்க வைத்து, அம்மாலையே மங்கையென்று கூறி, இருவருமொன்றுவதே இன்பமென் றியம்பி, அஃதே போன்று உயிர் பரம்பொருளை ஒன்று கின்றதென்றுரைத்து, காதல் வாழ்வே கடவுளை யெய்த வைக்குமென்ற நற்பெருஞ் சிறப்பைத் தண்டமிழின் தீஞ் சுவையெனத் திகழும் திருக்கோவையின் முதற் பாட்டிலே மணிவாசகர் திகழவைத்ததி னுயர்வென்னே!

உலகியலையும் உயிரியலையும் உணர்ந்து இவ்விரண் டிற்கும் அப்பாற்பட்டு, இவ்விரண்டினையும் இயக்கு விக்கும் முழுமுதற் பரம்பொருளை, தூய்மை, வாய்மை மெய்ம்மை, அறம் இவைகளை இறுகப்பற்றியதால், இனிதே, உணர்ந்து மகிழ்ந்த மாண்பை உலகுக் குரைக்க விழைந்த பொழுது உளத்தை உருக்கி, களிப்பிற் றிளைக்கவைக்கும், யாழோசை போன்ற மொழியுடை மங்கைக் கொப்புக் கூறும் தனிச் சிறப்பு மணிவாசகர் ஒருவரிடத்தன்றோ காண்கிறோம்.

மண்ணகத்தில் பிறத்தற்கு முன்னர் இறைவனிடத் திருந்தமையும், இனிதே கூறியவர் இவர் தவிர வெறெவரு மில்லை யென்பது தேற்றம். இறைவனிடத்திருந்த இவர் இவ் வவனிக்குப் போந்து இன்பக் கலையை யாவரும் பற்றியே வாழ வேண்டுமென மொழிந்தமையை யுன்னுங்கால், மங்கையரை மாயை யென்றும், வீடுபேறுக்குக் குறுக்கே நிற்பவர்கள் ஒண்டொடியரென்றும் கூறுகிறவர்களின் கூற்றை என்னென்று கூறுவது?

காதலி, காதல் முதிர்வால் காதலன் சிந்தையை மயக்கமுற வைக்கையில், காதலன் காதலியைக்கண்டு, தவம் புரிந்து பெறும் சிந்தாமணியும், தெளிந்த கடலில் வரும் அமிர்தமும் தில்லைப் பரம்பொருளின் பேரருளால் வருகையில் இகழ்வா ரெவருமில்லை யென்றும், அஃதேபோன்ற காதலியை இகழாதிருக்கையில் சிந்தையை மயக்கமுற வைப்பதேனென்று வினவியதை மணிவாசகர், மகிழ்வுடைக் காதலினுச்ச நிலையை விளக்குகையில் தில்லையானருளால் தான் தாதையர் தோன்றுகின்றனர் என்றமையால் தாதையரின் பெருமை என்னே?

செம்மையும், கற்பும், அறிவும், பண்பும், உருவாயொளிர்ந்த உயரிய ஒண்டொடியரின் உயர்வுடையுள்ளத் திலரும்பும் தூயகற்புறு காதலினொளியைத் தகவுடைய தனித் தமிழில் திகழ வைக்கையில் மன்பதை ஒளிபெற்றுயர்வெய்தல் வெள்ளிடைமலை. அணங்குகளினருமையை எழிலுடன் திகழவைத்த மணிவாசகனார், அனைத்தையுமாக்கி, அழித்து, ஆளும் சிவ பரம்பொருளை ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமென்றும்-அன்பு என்றும் மெய்ச் சுடரென்றும்-நல்லறிவென்றும் கூறிக்களிப்புற வைத்ததுடன், மண்ணுலகில் பொய்யான வாழ்விலுழலுதல் கூடாதென்றும், வினைகள் கடவுளருளால் அறுமென்று றுதியுடனுரைத்து அவருக்கிருந்த வினைகளை வேரறுத்து அவருள்ளத்தில் உறைந்து கிடந்தமையைக்

கூறி, சிவ நெறியின் செம்மையொளியைத் திகழ வைத்த தின் சிறப்பு என்னே!

இரு காதலருள்ளங்களில் கதிர்த்தெழுந்த அன்புணர்ச்சிக்கும், இன்பவுணர்ச்சிக்கும் தண்டமிழில் உருவமைத்து, உயிர் இன்ப அன்பாய இறையிடத்தொன்றுங்கால் எய்திய இன்பத்திற்குப் பைந்தமிழ் ஓவிய மமைத்து, காதலொளியையும், இறையொளியையும், ஒளிரவைத்த மணிவாசகர், பிற்றைக்காலத்தில் அறிவியலார் கண்ட முடிவுகளை முன்னரே கூறிய அறிவியலின் அருமையை ஆராய்வோமாக.

அறிவின் முதிர்வால் ஆராய்ச்சியின் பெருக்கால் இயற்கையின் தொடர்பால் பேரறிவு பெரிதும்பெற்று, புலமையில் முழுமை யெய்தி இலங்கும் பொருள்களில் மற்றவர்களால் கண்டறியாதவைகளைக் கண்டறிந்து, அறிந்தவைகளை அனைவருமறியப் புலமை மெருகிட்டு முழுமையுடன் வரைவதில் புலவர்கள், வல்லவர்கள். இவ்வுயர் நிலை எய்திய முழுப்பெரும் புலவர்கள் வருங்காலத்தில் நிகழ்வதையும், புதைபொருள் உண்மைகளையும், தனியறிவின் முதிர்வாலினிதே யறிந்து மக்களுக்கெடுத்துக்கூறி மன்பதைக்கு வழிகாட்டியாயிலங்குகிறார்கள், புலவர்களிடத்திருக்கும் தனிமாண்பு மதித்தற்கரிது. உருவமாயிலங்குப் பொருளின் நுண்மையையும், அருவமாயிலங்கும் பொருளின் அருமையையும், இனிதே யுணர்ந் துரைக்கும் பேராற்றல் பெற்றிலங்குவதுடன், வருங்காலத்தில் ஆய்வுகளைக் கொண்டறியும் அறிவியலாரின் (Scientist) ஆராய்ச்சி யுண்மைகளை முற் கூட்டி யுரைக்கும் ஆற்றல் நிரம்பப் பெற்றப்பெரும் புலவர்கள் மேல் நாட்டிலும் கீழ் நாட்டிலுமில்லாமலிருந்ததில்லை. இப்புலவர்களியம்பிய பேருண்மைகளையே பிற்காலத்தறிவியலார் இனிதே கண்டுலகுக் குரைத்தனர். நற்பொருளை (தத்துவம்) நன்குணராதான் நல்ல புலவனாயிருத்தலரிது. கருத்தினுணர்ச்சியைப படிப்பவருக் கூட்

டும் கருவிநடை. நடை புலவனின் ஆடையன்று; ஆனால் புலவனின் சதை, பண்பு, திறம். நடிப்பே நடை; நடிப்பில் நலமில்லையெனின் கருத்தும் நலமிழந்ததாகும்; கருத்து நலமாயினும் நடிப்பு நலிவுடையதாயின் பாழன்றி வேறென்ன? கருத்துக்கும் நடைக்கும் நிலைத்த தொடர்புண்டு. அறிவும், பண்பும், அழகும், அறிஞனுக்குப் புகலிடமாதலின் இம்மூன்றையும் மாண்புடன் மிளிர வைப்பவர்கள் புலவர்களன்றோ! எண்ணத்திற் கெழிலையும், கருத்திற்குக் கனிவையும் கொள்கைக்குக் களிப்பையும், சிந்தனைக்குச் சிறப்பையும் சீருடன் நல்கிச் சென்றதைச் செப்பி, நிகழ்வதை நவின்று, வருவதை யுரைத்து, அன்பையும், அருளையும், பண்பையும் மன்பதைக்கு மகிழ்வுடை இன்பத்தால் புலமை மெருகிட்டு மாண்புடை மொழியாலுணர்த்தி மன்பதையை மாண்புற வைத்து மண்ணுலகைக் கலை உலகாக்குபவர்கள் புலவர்களன்றி வேறெவர்?

அறிவியற் பிழம்பாம் நியூடன் பெருமகனார் மாநிலத்தில் பிறத்தற்கு நானூறு ஆண்டுகட்கு முன்னர், பிழையில்லா மகிழ்வுடை எழில் நிறையின்ப இலக்கியம் யாத்த மாபெருங் கலைக்கவி டாண்டே கவர்சக்தியை விதந்தோதி (Gravitation) அவ்விடத்திற்குப் பலமுடைய பொருள்களேகுகின்றன என்று கூறியுள்ளார் (The Divine Comedy Infer No. 34. Thow wast on that side, so long as I descended; when I turned myself, thow then didst pass the point to which all Gravities from every part are drawn.)

நியூடன் பிறத்தற்கு 30 ஆண்டுகட்கு முன்னர் ஆங்கில மொழிக்கே ஒரு கலைப்பிழம்பாக விளங்கி வையகத்திலின்றளவும் உவமையற்றுயர்வுடனிலங்கும் ஷேக்ஸ்பியர் என்னும் நல்லிசைப் புலவர் Troilus & Cressida என்னும் கனிவுறும் காதல் நாடகத்தில் கவர்சக்தியை (Gravitation)க் கூறி அதனிடத்தெல்லாப் பொருளு மேகுவதைப்போன்று வன்மையான அடிப்படையில் காதல் கட்டுப்பட்டுள்ளதென்றுரைத்துள்ளார்.

But the strong base and building of my love  
Is as the very centre of the earth,  
Drawing all things to is.........

நியூடன் என்ற பெருமகனாரே, கவர் சக்தியை (Law of gravitation) என்று உலகம் ஒப்புக் கொள்ளினும், முழுப் பெரும் புலவர்கள் இவருக்கு முன்னால் மொழிந்தமை புலவர்களின் நுண்ணறிவை நவில்கின்றதல்லவா ?

டெனிசன் என்ற ஆங்கில நல்லிசைப் புலவன் தன் உழுவல் நண்பன் இறந்தமைக்கு உள்ளமுடைந்து படிப் போருள்ளத்தைக் குழைத்தழவைக்கு மியல்புடைய நினைவாற்றுமை (In Memorium) என்னும் உள்ள முருக்கும் பாடலில் பல தாழ்ந்த பிறப்புக்களெடுத்த பின்னரே மக்கட் பிறவி உண்டாகிறதென்று கூறியுள்ளார்.

And, moved thro' life of lower phase
Result in man...... (In Memorium—Teningson)

பிரௌனிங் என்ற நல்லிசைப் புலவர், உயிரினங்கள் மிகச் சிறியபிறப்பில் தொடங்கிக் கடைசியில் மனிதப் பிறப்பில் முடிகிறதென்கிறார்.

Thus he dwells in all
From life's minute beginings, apart last
To man (Browning)

கூர்தலியலைக் கூறினவர் டார்வின் என்ற பேரறிஞரென்பது ஒப்ப முடிந்த முடிபாயினும் டார்வினுக்கு முன்னரே டெனிசனும், பிரௌனிங்கு, கூர்தலியலைக் (Evolution) கூறியதை யுன்னுங்கால் அறிவியலாரினும் புலவர்களே மேன்மை யுடையவர்களென்பது சிறந்து விளங்குகிறதன்றோ ?

தமிழகத்தில் தோன்றிய மணிவாசகர் செடி, கொடி, மரம், புழு, பாம்பு பறவை, விலங்கு, மனிதர், பேய், அசுரர், முனிவர், தேவர், என்ற பல பிறப்புக்கள் பெற்றதாகக் கூறியதைக் கூர்ந்தாராயுங்கால் அறிவியலார் அறைந்த அனைத்தையும், அவர்களுக்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னமே பகர்ந்தமை பளிங்கென விளங்கவில்லையா ?

விண்ணிலிலங்கும் கதிரவனொளியையும், மதியின் தண்மையையும், தீயின் வெம்மையையும், மேலெழும் காற்றையும், நிழல் திகழும் நீரையும், மண்ணின் திண்மை

யையும் இனிதே மொழிந்தமையை எண்ணுங்கால் பூதங்களின் நுண்மையை நன்கு நவின்றதுடன், மக்களினத்திடையே மண்ணும், நீரும், காற்றும் உள்ளன வென்றும், மக்களினத்தின் சேய்மையிலே கதிரவனும், மதியும் இருக்கின்றன வென்றும் மொழிந்த மணிவாசகரது அறிவியலின் மாட்சியைக் கூர்ந்தாராயுங்கால் போதிய வெப்ப தட்பம் தொலைவிலிருந்தே பெற வேண்டுமென்றும், அண்மையிலேயே காற்றும், நீரும், மண்ணும் இருத்தல் வேண்டுமென்றுமுணர்த்திய தினுயர் வென்னே? தாயின் கருப்பையில் முதல் திங்கள் முதல் பத்து திங்கள் வரை கருஎய்தும் வளர்ச்சியை மணிவாசகர் எடுத்தியம்பியதை எண்ணுந்தோறும் உடற்கூற்றினியல்பை நன்குணர்ந்து தெளிந்த விளக்கம்பெற்ற நன் மருத்துவப்புலவர் என்று கூறினும் சாலப்பொருந்தும்.

வையகம் உருண்டையாயுள்ளதென்றும், அண்டத்தின் பகுதியென்றும், விண்ணிலிலங்கும் விண்மீன்கள் எண்ணில வென்றும், எடுத்துரைத்த மணிவாசகரின் அறிவியலை யாராயுங்கால் வான நூற்புலமை நிரம்பப்பெற்ற பெற்றியரென்று நாமுணர்வதுடன் அணுக்கள் இயல்பாகவே இயங்கிக்கொண்டிருக்கின்றனவென்று துணிந்து அன்று அவர்கண்ட நன்முடிவு இற்றைக் காலத்து அறிவியலார் ஆய்வுகளைக்கொண்டு காணும் முடிவிற்குப் பொருத்தம் காண்பதுடன், புலவர்கள் வருங்காலத்தைப்பற்றிய முடிவுகள் முற்கூட்டி யுரைப்பதில் வல்லவர்கள் என்பதை மறுக்கவியலாது ஏற்கவேண்டிய நிலையிலுள்ளோம்.

முத் தமிழுக்குத் திருக்கோவையால் மாண்புதந்து, இறை நெறிக்குத் திருவாசகத்தால் தகவு தந்து, திணை மயக்கத்தை மொழிந்து, காதலியலைக்கூறி, கற்பின் உயர்வை உரைத்து, பாவையர்க்கும் பீடளித்து, கூர்தலியலையும், பூத இயலையும், வான நூலியலையும், உடற்கூற்றியலையும், இனிதே இயம்பி, இன்பக் கலையையும் இறையியற் கலையையும் அறிவியற் கலையையும் இனிதே ஏத்தி வையகம் வளமை மலிந்த மலர்வனமென மொழிந்து ஆணும், பெண்ணும் ஒன்றி உவகையெய்தினலொழிய உயிர் இறைவனை எய்த வியலாதென்று கூறி அகத்திணை கொண்டே ஆண்டவனையடைய அருங்காதல் நெறியை நவின்ற மாண்புடை முத்தமிழ் மணிவாசகர் வாழ்க.